பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

பக்கங்கள் எட்டு

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 ஆவணி 05 திங்கட்கிழமை (21 - 08 - 2000) VALAMPURI ஒலி: 245

## ★ இலங்கையின் இனப் பிரச்சினை தீர்வு விடயத்தில் 18 வருட போருக்கு முடிவுகட்டுவேன்

## நாடுபிரிவதை அனுமதிக்கமாட்டேன்

### ஜனாதிபதி சந்திரிகா, ரணில் விக்கிரமசிங்கா சூளுரை

(கொழும்பு விசேட நிருபர்)

கடந்த 18 வருடங்களாக நீடித்து வரும் யுத்தத்திற்கு முடிவு காண வேண்டுமென்பதற்காக எனது உயிருக்கு விடுவிக்கப்பட்ட அச்சுறுத்தலையும் பொருட்படுத்தாது தீர்வு யோசனையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தேன். இச்சந்தர்ப்பத்தில் ஐக்கிய தேசியக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் நடந்து கொண்டமுறை பற்றிபொது மக்கள் சிந்தித்து யாருக்கு வாக்களிப்பதென்று தீர்மானிக்க வேண்டும் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கூறியுள்ளார்.

இலங்கை பிரிக்கப்படுவதை ஐக்கிய தேசியக் கட்சி ஒருபோதும் அனுமதிக்கமாட்டாது. அதேவேளை மாகாணங்களுக்குக் கூடுதலான அதிகாரிகளை வழங்குவதன்மூலம் இனப்பிரச்சினையைப் பேச்சுவார்த்தை மூலம்தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமென ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா பத்திரிகையாளர் மாநாடொன்றில் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மகாநாடு நேற்று கேகாலை விளையாட்டு அரங்கில் நடைபெற்ற போதேமேற்கண்டவாறு ஜனாதிபதிதெரிவித்தார். ஜனாதிபதி அங்கு மேலும் பேசுகையில்' கூறியதாவது, பொய்யானவாக்குறுதிகளை வழங்கி மேலும் ஆறு வருடகாலத்துக்கு பதவியில் இருக்க அரசாங்கம் விரும்பவில்லை. தற்போதைய சூழ்நிலையில்இனநெருக்கடிக்குநிரந்தரமான தீர்வு ஒன்றைக்காணவே மக்கள் விரும்புகிறார்கள்· அதற்காகவே மக்கள் என்னை மீண்டும் பதவியில்அமர்த்தியுள்ளார்கள் (8 ஆம்பக்கம் பார்க்க)

எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வமான வாசஸ்தலத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே ரணில் விக்கிரமசிங்கா இவ்வாறு தெரிவித்தார்:

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது: விடுதலைப் புலிகளுடன் பேசி யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கையை எடுத்து இனப் பிரச்சினைக்கு தீர்வுக்காண வழிவகைகளை காண்பேன்; இனப் பிரச்சினைக்கான தீர்வு யோசனைகளை (8-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் மக்களின் அபிலாஷைகளை பிரதிபலிக்காத தீர்வை ஏற்கோம்

### தமிழ்க் காங்கிரஸ் செயலர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்ய முடியாத எத்தகைய தீர்வுத் திட்டத்தையும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஆதரிக்காது மட்டுமல்ல, அத்தகைய கொள்கையை உடைய எவருடனும் கூட்டுச்சேரமாட்டோம் என்று அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் செயலாளரானஎன்.குமரகுருபரன்நேற்றிரவு வலம்புரிக்குத் தெரிவித்தார்.

என். குமரகுருபரன் மேலும் தெரிவிக்கையில், பாராளுமன்றத்தில் தமிழ் (8 ஆம் பக்கம் பார்க்க

## வவுனியா - மன்னார் வீதியில் இராணுவ அணி மோதலில் ஒருவர் பலி

[வவுனியா]

வவுனியாவில் இரு இராணுவ அணிகளுக்கிடையே அடையாளம் தெரியாத வகையில் இடம்பெற்ற மோதல் சம்பவமொன்றில் இராணுவ கோப்ரல் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது:

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி (8 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் வன்முறை தொடங்கியது ஜே. வி. பி. அலுவலகம் சேதம்

[கொழும்பு]

இரத்மலானையில் உள்ள ஜே.வி.பி·யின் காரியாலயம் ஒன்று இனந்தெரியா தோரால் அடித்து நொறுக்கப்பட்டிருப்பதாக முறைப்படு செய்யப்பட்டுள்ளது:

பாராளுமன்றம் கலைக்கப் பட்டபின் இடம்பெற்ற முதலாவது தேர்தல் வன்முறைச் சம்பவம் இதுவென்று தெரி (8 ஆம்பக்கம் பார்க்க)

## புளொட் தலைவர் சித்தார்த்தன் தந்தையின் தொகுதியில் போட்டி

[வவுனியா நிருபர்]

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்கு சகல அரசியல் கட்சித் தலைவர்கள் முக்கியஸ்தர்கள் யாழ்ப்பாணம் வரவுள்ளதாக வன்னிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் யாழ்ப்பாணத்தில் தந்தையான தர்மலிங்கம் போட்டியிட்டு வெற்றி பெற்று வரும் மானிப்பாய் தொகுதியின் வேட்பாளராக நிற்கவுள்ளார் என்று புளொட் வட்டாரங்கள (8 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுத் தேர்தல் பலிக்களம் ஆரம்பம் ஜே. வி. பி. தொண்டர் மரணம்

(கொழும்பு)

தேர்தல் பிரச்சார சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்த ஜே. வி. பி. யின் தொண்டர் ஒருவர் இனந் தெரியாத ஆயுதக்குழுவினால் தாக்கப்பட்டு மரணமடைந்த சம்பவமொன்று நேற்று இடம்பெற்றது. இதில் சந்திக சுதந்தசில்வா (23) என்பவரே கொல்லப்பட்டவராவார்:

பாராளுமன்றம் கலைக்கப் பட்டு பொதுத் தேர்தலுக்கான நடவடிக்கையின் போது பலியான முதல் நபர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது:

(ந)

## மத்திய அமைச்சர் குமாரமங்கலத்துக்கு இரத்தப்புற்று நோயென கண்டுபிடிப்பு!

(புதுடில்லி)

மத்திய மின்துறை அமைச்சர் ரங்கராஜன் குமாரமங்கலத்துக்கு இரத்தப் புற்று நோய் ஏற்பட்டுள்ளமை வைத்திய நிபுணர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு மாத காலமாக உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்த அமைச்சர் குமாரமங்கலத்தின் வயது 48 ஆகும்.

புதுடில்லியில் அனைத்து இந்திய மருத்துவ அறிவியல் கழக மருத்துவமனையில் (8 ஆம் பக்கம் பார்க்க

## ★ பொதுத் தேர்தல் தொடர்பாக உதவித் தேர்தல் ஆணையாளர்களுடன் தேர்தல் ஆணையாளர் சந்திப்பு!

[கொழும்பு]

பொதுத் தேர்தல் தொடர்பாக தெரிவித்த கட்சி உத்தியோகஸ்தர்கள் உதவித் தேர்தல் ஆணையாளர்கள் ஆகியோர்களை எதிர்வரும் வியாழக்கிழமை தேர்தல் ஆணையாளர் தயானந்தா திஸநாயக்கா சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

இக்கலந்துரையாடலின் போது தேர்தலுக்கான வாக்குச்சாவடிகள் அமைப்பது தொடர்பாகவும் வாக்குச் சாவடிகளின் எண்ணிக்கை (8 ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.ஆர்.எல்.எவ். சுரேஸ் அவசரமாக நாடு திரும்புகிறார்

(வவுனியா)

தனிப்பட்ட விஜயம் மேற்கொண்டு லண்டன் சென்றிருந்த ஈ. பி. ஆர். எல்.எவ். முன்னாள் செயலாளர் நாயகம் அவசரமாக லண்டனில் இருந்து நாடு திரும்பவுள்ளார்.

ஈ.பி. ஆர். எல். எவ்· வின் (8ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் தரப்பில் உயிரிழந்தோர்

(வவுனியா)

மன்னார் 10-ம் கட்டைப் பகுதியில் இம் மாதம் 14-ம் திகதி இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதலின் போது.

[8 ஆம் பக்கம் பார்க்க]

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சின்னஞ்சிறு விளம்பரம்

### சிமெந்து கூரை ஓடுகள்

லண்டன் Parry நிறுவனத்தால் தரநிர்ணயம் செய்யப்பட்ட சிமெந்து கூரை ஓடுகள், முகட்டோடுகள் விற்பனைக்குண்டு. அத்துடன்பல அளவுப் பிரமாணங்களில் இயந்திரங்களால் தயாரிக்கப்படும் கொங்கிறீட் கற்களும் விற்பனைக்குண்டு.

தொழிற்சாலையில் நேரடியாக பொருட்களை கொள்வனவு செய்பவர்களுக்கு விசேட கழிவுகளும் இலவச போக்குவரத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

லோகேஸ் கூரை ஓட்டுத் தொழிற்சாலை.

பரராசசேகரப் பிள்ளையார் கோவிலடி, இணுவில். (1611)


## உழவு இயந்திரம் கொள்வனவு

வலி. கிழக்குப்பிரதேசசபையினர் தமது பாவனைக்காக உழவு இயந்திரம் ஒன்றைக் கொள்வனவு செய்துள்ளனர். இது பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சேவைக்காகப் பயன்படுத்தப்படும்என அறிய வருகின்றது. (க- 79)

## இளம் பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

தீக்காயங்களுக்குள்ளான பவானி- குனேஸ்வரன் (வயது 31) என்பவர் நேற்று முன்தினம் யாழ் மருத்துவ மனையில் மரணமாகியுள்ளார்.

இப்பெண் குடும்பத்தகராறு காரணமாகதீமூட்டிக்கொண்டார் என்றும் இவரைக் காப்பாற்ற முனைந்த இவரின் கணவன் குனேஸ்வரனும் தீக்காயங்களுக்குள்ளானார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (12- 105)

## இடம் பெயர்ந்தவர்களிற்கு செஞ்சிலுவைச் சங்கம் உதவி

(அரியாலை)

வடமராட்சி, வலிகாமம் பகுதிகளிலுள்ள முகாம்களில் அண்மையில் ஏற்பட்ட யுத்த அனர்த்தங்களினால் இடம் பெயர்ந்து தங்கியுள்ள மக்களுக்கு உணவல்லாத நிவாரணப் பொருட்களை சர்வதேச செஞ்சிலுவைக் குழுவினர் வழங்கிவருகின்றனர்.

இம்மக்களிடையே நிலவும் சுகாதார சீர்கேடுகள், குடிநீர்ப்பிரச்சனை, மலசல கூட வசதிகளில் ஏற்படும் சிக்கல் என்பவற்றை தீர்க்கும் நடவடிக்கைத்திட்டங்களும்மேற்கொள்ளப்படுகின்றன.

இதற்காக பயிற்றுவிக்கப்பட்ட தொண்டர்கள நியமிக்கப்பட்டுள்ளதாகவும், செஞ்சிலுவைச் சங்க சர்வதேச குழுவின் யாழ்ப்பாணக்கிளையின் பொதுசன தொடர்பு அதிகாரி அன்ரன் செல்வராசா தெரிவித்தார். (த-106)

## ஆரம்ப ஆசிரியர் தெரிவில் குறைபாடுகள் ஒரு சிலவாரங்களில் நிவர்த்திக்கப்படும்

(மண்கும்பான்)


ஆரம்ப ஆசிரியர் தெரிவில் இடம்பெற்ற குறைபாடுகள் தொடர்பாக ஒரு சில வாரங்களில் சாதகமான பதில் அனுப்பிவைக்கப்படும் என மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பரமேஸ்வரன் உறுதியளித்துள்ளார்.

கடந்த 18ஆம் திகதி யாழ். மத்தியகல்லூரியில் இடம் பெற்ற மக்கள் குறைகேள் செயலமர்வில் எழுப்பப்பட்ட வினா ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு உறுதியளித்துள்ளார்.

வேலணைப் பிரதேசத்தில், க.பொ.த.உயர்தர பரீட்சையில் அதிகூடிய புள்ளிகள் பெற்றோர் பலர் இருக்க, குறைவான புள்ளிகள் பெற்ற பலர் உயர்தர புள்ளிகள் அடிப்படையிலான ஆசிரியர் தெரிவில் இடம் பெற்றிருப்பது குறித்து எழுப்பப்பட்ட வினாவுககே, திமலை திரும்பி இருவாரங்களுக்கிடையில் இதற்கான பதிலை அனுப்பி வைப்பதாக உறுதியளித்துள்ளார். (உ-83)

## வாழ்த்துகின்றோம்

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் இவ்வாண்டு வழங்கப்பட்ட ''கலாபூஷணம்'' என்னும் சிறப்பு விருது பெற்ற கோண்டாவில் மேற்கு காளி கோவிலடியைச் சேர்ந்த மூத்த நாதஸ்வர வித்துவான்



### திரு. கந்தசாமி இராமமூர்த்தி

அவர்கள் நீண்ட ஆயுள் பெற்று நீடூழிகாலம் வாழ்ந்து, நாதஸ்வர ஓசையை ஈழ மண்ணெங்கிலும் ஒலிக்கச் செய்ய இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

கோண்டாவில் மக்கள்.

1646

# கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரணதர) மாதிரிப் பரீட்சை - 2000

## வரலாறும் சமூகக்கல்வியும்

### பகுதி I

ஈ. எ. ஜெயன்

கவனிக்க : (1) எல்லா வினாக்களுக்கும் விடை தருக
(2) விடைகளுள் சரியனானது அல்லது மிகப் பொருத்தமானது என நீர் கருதும் ஒரு விடையைத் தெரிவு செய்க.
(3) நேரம் ஒரு மணித்தியாலங்கள்

01) பிரித்தானியர் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கைக்கு தேவையான நிலத்தினைப் பெறுவதற்கு மேற்கொண்ட நடவடிக்கை?
(1) நிலமானிய முறையை ஏற்படுத்தியமை
(2) பிரதானிகளிடம் குத்தகைக்கு நிலங்கள் பெற்றமை
(3) பாழ் நிலச்சட்டத்தை நிறைவேற்றியமை
(4) மக்களிடம் காசு கொடுத்து காணிகளை வங்கியமை

02) கி.மு. 247 ல் மகிந்த தேரரும் அவரது குழுவிரும் இலங்கை வந்ததற்கான முக்கிய காரணம்?
(1) தந்தை அசோகச் சக்கரவர்த்தியின் திக் விஜயத்தை தவிர்த்து தர்ம விஜயத்தை நடைமுறைப்படுத்தல
(2) ஓவியம், சிற்பம், கட்டிடம் போன்ற கலைகளின் வளர்ச்சிக்குப் பாடுபட
(3) ஆதி வணக்க முறையான விருட்ச, இறந்தோர் வணக்கத்தை பௌத்த சமய வணக்கத்துடன் இணைக்க
(4) பௌத்த சமயத்தை நிலை நாட்டுவதற் கேற்ற குரு பீடத்தினை அமைப்பதற்கு

03) 15-ம், 16-ம் நூற்றாண்டுகளில் நாடுகாண் பயணங்களை மேற்கொண்ட ஐரோப்பிய நாடுகளின் பிரதான நோக்கம்?
[1) கீழைத் தேச வர்த்தகத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது
(2) தமது கைத்தொழிலுக்குத் தேவையான மூலப் பொருட்களைப் பெறுவது
(3) தமது நாடுகளில் அதிகரித்துக் கொண்டிருந்த சனத்தொகையைக் குடியேற்றுவதற்கு நாடுகளைத் தேடுவது
(4) பூர்த்தி செய்யப்பட்ட உற்பத்திப் பண்டங்களை விற்பனை செய்வதற்கு சந்தைகளைத் தேடுவது

04) பிரித்தானியர் மலையக இராச்சியத்தைக் கைப்பற்ற முடிந்தமைக்குரிற முக்கிய காரணம்?
(1) கண்டி பாதுகாப்பான அரனாகக் காணப்பட்டமை
(2) பிரித்தானியரின் கொரில்லாப் போர் முறை
(3) சிங்களவருக்குள் காணப்பட்ட ஒற்றுமையின்மை
(4) கண்டிக்கு புகையிரதப் பாதைகள் அமைக்கப்பட்டமை

05) வசபன், தாதுசேனன், மகாசேனன் ஆகிய மன்னர்கள் தொடர்பான பொது இயல்பு
(1) நாட்டை ஒன்றுபடுத்தியமை
(2) அந்நியப்படை எடுப்புகளை முறியடித்தமை
(3) தெய்வங்கள் என மக்கள் வணங்கியமை
(4) குளங்கள், கால்வாய்கள் அமைத்தமை

06) "நாங்கள் இதுவரையாடியது கறுவா என்னும் மணப் பெண்ணைச் சுற்றியே". இது எந்த நாட்டவரின் கூற்று?
(1) ஒல்லாந்தர் (2) போத்துக்கேயர் (3) பிரான்சியர் (4) பாண்டியர்

07) மானிய முறையின் பிரதான இயல்புகளில் ஒன்று?
(1) பணக்கொடுக்கல் வாங்கல் முறை நிலவியமை
(2) தேசிய அரசுகள் உதயமாகியமை
(3) வர்த்தக நடவடிக்கைகள் வளர்ச்சி பெற்றமை
(4) மன்னனுக்கு வழங்கிய சேவைக்கு உதவியாக நிலம் வழங்கப்பட்டமை

08) இராஜகாரிய முறைஒழிக்கப்பட்டமையினால் இலங்கையில் ஏற்பட்ட மிக முக்கியமான சமூகமாற்றம்?
(1) சாதி வேறுபாடு சமூகத்தில் இருந்து அகற்றப்பட்டமை
(2) தனிமனித சுதந்திரத்திற்கு வழி வகுக்கப்பட்டமை
(3) மக்கள் புதிய தொழில்களில் ஈடுபட்டமை
(4) தோட்ட தொழிலாளர் வகுப்பு உருவாகியமை

09) டொனமூர் அரசியல் யாப்பு தொடர்பான விதப்புரைகளில் அதிக அளவு ஜனநாயகத் தன்மையை உள்ளடக்கிய விதப்புரை எது?
(1) பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம்
(2) சர்வசன வாக்குரிமை
(3) நிர்வாகக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டமை
(4) அரசுக் கழகம நிறுவப்பட்டமை

10) அநுராதபுரக் காலம் பற்றிய நான்கு கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன இவற்றுள் ஒன்று பிழையானதாகும் அப்பிழையான கூற்றைத் தெரிவு செய்க?
(1) சிகிரிய பளிங்குச் சுவரிலுள்ள செய்யுள்களை எழுதியவர்களுள் சாதாரண பொதுமக்களும் இடம்பெற்றுள்ளனர்
(2) சந்திர வட்டக் கல்லானது சிலை வீடொன்றின் நுழை வாயிலில் காணக் கூடிய ஒரு கலை ஆக்கமாகும்
(3) மிக புராதன காலத்தில் இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் நல்லுறவு நிலவியது
(4) அநுராதபுரத்திலுள்ள மகாவிகாரையில் திரிபிடகம் எழுத்தில் பொறிக்கப்பட்டது

11) இலங்கையை ஆக்கிரமித்த ஓர் அந்நிய இனத்தைப் பற்றி ஒரு மாணவன் எழுதிய சில வாக்கியங்கள் கீழே தரப்பட்டடுள்ளன இவ்வாக்கியங்கள் எந்த அந்நிய இனத்தவருக்குப் பெரிதும் பொருந்தும்?
★ முடிந்தவரை போர் நடவடிக்கைகளைத் தவிர்த்துக் கொண்டனர்
★ முடிந்தவரை இலாபத்தை அதிகரித்துக் கொள்ள முயற்சி செய்தினர்
★ தமது தாய் நாட்டின் செல்வத்தை குடியேற்ற நாட்டுக்குச் செலவு செய்யவில்லை
(1) போத்துக்கேயர் (2) ஒல்லாந்தர் (3) சோழர் (4) ஆங்கிலேயர்

12) 16-ம் 17-ம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த இலங்கை மக்கள் பற்றி ஒரு வெளிநாட்டவர் எழுதிய நூலிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு பகுதி வருமாறு ''அவர்கள் தமது வீடுகளின் கதவுகளைப் பூட்டுவதில்லை'' ''சாலை எதிர் நோக்கும் போது அவர்கள் காட்டும் உளவலிமை வியப்புக்குரியது'' இப்பகுதியின் மூலம் வெளியிடப்படும் ஒரு விடயம் என்ன வெனில் அக்காலப் பகுதியில்
(1) கதவு கறுக்குப் பூட்டுக்கள் பொருத்தப்பட்டிருக்க வில்லை என்பதாகும்
(2) மக்கள் களவு செய்வதில் ஈடுபடவில்லை என்பதாகும்
(3) தனி ஆட்சிகளுக்கான வீடுகளுக்குப் பதிலாக சமுதாய உறைவிடங்கள் காணப்பட்டன என்பதாகும்
(4) கதவுகளைப் பூட்டி வைத்தல் சட்டப்படி தடை செய்யப்பட்டிருந்தது என்பதாகும்

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

### தென்மராட்சி கல்வி வலயத்திலிருந்து

# மீட்கப்படாத சுயவிபரக் கோவைக்கு மாற்று ஏற்பாடுகள் வேண்டும்

## வடமாகாண ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

(தென்மராட்சி)

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக தென்மராட்சி கல்வி வலயத்தில் எடுக்கமுடியாமல் இருக்கின்ற ஆசிரியர்களின் சுயவிபரக் கோவைகளுக்காக மாற்று ஏற்பாடுகள் மேற்கொண்டு சம்பள நிலுவைகள், மற்றும் ஆசிரியர் பதவி உயர்வுகளை வழங்க ஆவன செய்ய வேண்டும் என வடமாகாண ஆசிரியர் சங்கத்தினர் யாழ். மத்திய கல்லூரியில் இடம் பெற்ற மக்கள் குறைகேள் செயலமர்வின் போது வடக்கு. கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் க. பரமேஸ்வரனிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்;

வடமாகாண ஆசிரியர் சங்கத்தின் தலைவர் சா. தியாகலிங்கம் தலைமையில் சென்ற குழுவில் செயலாளர் மு. இராசநாயகம் செயற்குழு உறுப்பினர் ந. புகன்சிறிந்திரன் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

இச்சந்திப்பின் போது ஆசிரியர் சங்கத்தினர் பின்வரும் விடயங்கள் குறித்து வலியுறுத்தினர் எனத் தெரியவருகின்றது:

★ஆசிரியர்களின் சம்பளம் ஒவ்வொரு மாதமும் 20ம்திகதி வழங்கப்படல் வேண்டும்.

★ஆசிரியர் வளப் பங்கீடு தொடர்பாக ஆசிரிய வருடாந்த இடமாற்றங்கள் வட-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் சுற்று நிருபத்தின் அடிப்படையில் மேற்கொள்ளல்.

★அதிபர் சேவைக்கால ஆலோசகர் பதவி நியமனங்களின்போதுவலயங்களுக்கிடையில் உள்ள வேறுபாடுகள் நீக்கப்பட்டு மாவட்டம்முழுமைக்கும் பொதுவான நடைமுறையைப்பின்பற்றல்.

★யாழ். மாவட்டத்திற்குசரிய இலவசபாட நூல்கள் உரிய காலத்தில் மாணவர்களுக்குக் கிடைக்கச் செய்தல்.

★அண்மையில் வழங்கப்படவுள்ள ஆசிரிய நியமனங்களுக்கு பாடத்துறைகள் ஒதுக்கப்படும் போது க.பொ.த உயர்தரத்தில் சித்தியடைந்த பாடங்கள் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்;

இவ் விடயங்களை அமுல் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என கல்விச் செயலாளர் உறுதியளித்துள்ளார் எனவும் அறியப்படுகின்றது. (க)

## கட்டட வசதிகள் இல்லை

(யாழ்ப்பாணம்)

''சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் கடந்த முப்பது வருடங்களாக எவ்வித கட்டடங்களும் நிர்மானிக்கப் படவில்லை'' இவ்வாறு அக் கல்லூரியின் அதிபர் சூ சிவநேஸ்வரன் தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை ஈ. பி. டி. பி. தலைமை அலுவலகத்தில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் கே. என். டக்ளஸ் தேவாநந்தா தலைமையில் இடம்பெற்ற கல்வி சம்பந்தமான கலந்துரையாடலிலேயே அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

### வடக்கு . கிழக்கில்

## வேலையற்ற பட்டதாரிகளுக்கு விரைவில் வேலை வாய்ப்பு

### முதல் கட்டமாக 137 பேருக்கு நியமனம்

[யாழ்ப்பாணம்]

வடக்கு-கிழக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாக வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன் முதற் கட்டமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் 137 பேருக்கு ஆசிரிய நியமனம் வழக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நியமனம் பெறுவோர் மட்டக்களப்பு, கல்குடா, பட்டிருப்பு பகுதிகளில் பணியாற்றுமாறு பணிக்கப்பட்டுள்ளனர் எனவும் இவர்களுக்கான நேர் முகப்பரீட்ஷைகள் விரைவில் நடைபெறும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தப்பட்ட அறிவித்தல்கள் மட்டக்களப்பு நகரில் கல்விப் பணிமனை விளம்பர பலகையில் ஒட்டப்பட்டுள்ளது; வடக்கு- கிழக்கு மாகாண கல்வி அமைச்சு செயலர் க. பரமேஸ்வரன் ஒப்பமிட்டுள்ளார்.

யாழ். மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியினாலேயே இந்த ஆசிரிய நியமனம் வழங்கப்படவுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட ஈ.பி.டி.பி. அமைப்பாளர் இரா. பிரபாகரன் தெரிவித்துள்ளார். (க-108)

## மலசல கூடங்கள் திருத்தி அமைப்பு

[மந்திகை]

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையின் மலசல கூடங்களை நவீன முறையில் மீள் அமைப்பு செய்வதற்கான அனுமதியினை வடக்கு-கிழக்கு மாகாண அமைச்சு வழங்கியுள்ளது:

15 இலட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப் படவிருக்கும் மேற்படி வேலைத்திட்டங்கள் விரைவில் ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (த-23)

### வடக்குக் கிழக்கில்

# 5 ஆயிரம் ஆசிரியர் வெற்றிடங்கள் 30 ஆயிரம் பேர் விண்ணப்பித்தனர்

### வடக்குக் கிழக்கு மாகாண கல்விஅமைச்சு திணறல்

(தென்மராட்சி)

இலங்கையிலுள்ள அரசாங்க பாடசாலைகளில் 14 ஆயிரம் ஆசிரியர்கள் தேவைக்கு மேலதிகமாக இருக்கின்றனர் என உலக வங்கி சுட்டிக்காட்டியுள்ளதாகத் தெரியவருகின்றது.

அதேசமயம் வடக்கு கிழக்கிலுள்ள அரசாங்க பாடசாலைகளில் போதிய ஆசிரியர் வளம் இல்லாமல் இருப்பதாகவும் 5000 ஆசிரியர்களுக்கு வெற்றிடம் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

வடக்கு கிழக்கில் தற்போது 1100 பட்டதாரிகள் வேலையற்று இருக்கின்றனர். நியமனங்கள் வழங்குகையில் தமக்கு முன்னுரிமை வழங்கப்படல்வேண்டும் எனக் கோரி வருகின்றனர்.

அதேபோல தொண்டர் ஆசிரியர்கள் ஆரம்பபாடசாலை ஆசிரியர்களாக நியமனம் பெற்றவர்கள். மற்றும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் தமக்கும் நியமனங்கள் வழங்கப்படல் வேண்டும் என்பதை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மக்கள் குறைகேள் செயலமர்வில் எடுத்துக் கூறியிருந்தனர்:

அத்துடன் இலங்கையிலுள்ள அரசாங்க பாடசாலைகளில் எந்தவொரு ஆசிரியரும் பயிற்றப்படாத ஆசிரியராக இருக்கக்கூடாது என்ற ஒரு நிபந்தனையை உலக வங்கி முன்வைத்துள்ளது எனவும் அறியப்படுகின்றது;

அதேசமயம் வடக்கு கிழக்கு மாகாணத்தில் ஒவ்வொரு வருடமும் சராசரியாக 700 800 ஆசிரியர்கள் ஆசிரிய சேவையில் இருந்து விலகிக் கொள்கின்றார்கள் எனவும் கூறப்படுகின்றது;

இது இவ்விதம் இருக்க வடக்கு கிழக்கில் 5 ஆயிரம் ஆசிரியர்களுக்கான வெற்றிடம் இருக்கின்ற போது, 30 ஆயிரம் பேரின் பட்டியல் கிடைத்துள்ளது. இந்தவகையில் என்ன செய்வது எனத் தெரியாத நிலையில் வடக்கு கிழக்கு மாகாணசபையில் கல்விஅமைச்சு உள்ளதாகவும் தெரிகின்றது:

மேலும் பல்கலைக்கழகத்தையும் பாடசாலையையும் ஏமாற்றி பட்டம் பெற்றார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் இரு பட்டதாரி ஆசிரியர்கள் கிழக்கு மாகாணத்தில் சேவையில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர் என்ற தகவலும் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். [க-77]

## நல்லையில் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய இந்துப் பேரவையின் நல்லைக் கந்தன் உற்சவகாலத் தெய்வீக நிகழ்ச்சிகள்தொடரில் இன்று திங்கட்கிழமை ''வாழ்க்கையில்திருமுறை'' எனும்தலைப்பில் சைவப்புலவர் கந்த. சத்தியதாசன் சொற்பொழிவாற்றவுள்ளார்.

இந்நிகழ்வு அறுபத்து மூன்று நாயன்மார் மடத்தில் பி. ப. 2. 00 மணிக்கு இடம் பெறவுள்ளது. (செ)

## 6 சைக்கிள்கள் திருட்டு

கொற்றவெத்தை கோவியம் பகுதியில் ஒரே இரவில் 6 துவிச்சக்கர வண்டிகள் திருட்டுப் போயுள்ளன.

அப்பகுதியில் கிருஷ்ணாந்தன் என்பவரது வீடு உட்பட பல வீடுகளில் திருட்டு இடம் பெற்றுள்ளது. (க-18)

## கோடரி வெட்டிற்கு இலக்காகிய நபர் யாழ். வைத்தியசாலையில் மரணம்

(யாழ்ப்பாணம்)

கோடாரி வெட்டிற்கு இலக்காகி கடந்த 13 ஆம் திகதிமுதல் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த உரும்பிராயைச்சேர்ந்த செல்லத்துரை கனகராசா (வயது 28) என்பவர் நேற்று அதிகாலை மரணமானார்;

பிரஸ்தாபநபரின்சகோதரன் இவரை கோடரியால் வெட்டினார் என்றும் தெரியவந்துள்ளது.

அவரது மகனான கனகராசா நிலான் (வயது - 04) என்பவரும் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (க-105-12)

## பருத்தித்துறை நகரசபை மீன் சந்தை இன்று திறப்பு

(புலோலி)

பருத்தித்துறைநகரசபைக்கு ஜனாதிபதியின் விசேட மூலதனநன்கொடை நிதியின் கீழ் சுமார் 40 இலட்சம் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நவீன மீன் சந்தை இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு பருத்திதுறை நகரசபைத் தலைவர் ஏ. வின்சன் கெனடியால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இத்திறப்பு விழாவிலே பிரதம விருந்தினராக யாழ். பிராந்திய உள்ளூராட்சிஉதவி ஆணையாளர் வி கிருஷ்ணசாமியும்சிறப்புவிருந்தினராக வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆ. சிவசுவாமியும் கலந்து கொள்வார்கள் என பருத்தித்துறை நகரசபைத் செயலாளர் எஸ்; கமலேஸ்வரன் அறிவித்துள்ளார். (சு. 52-48)

## வல்லையில் மீன்பிடிப்போர் அதிகம் பொது மக்கள் பெரும் சிரமம்

[துன்னாலை]

வல்லை சிறுகடல் நீர் ஏரிப் பரப்பில் மீன்பிடிப்பவர்கள் தொகை அண்மைக் காலமாக அதிகரித்து வருவதுடன் பிடிக்கப்படும் மீன்கள் அவ் இடத்திலேயே விற்கப்படுகின்றன.

இந்நடவடிக்கையினால் வீதியில் பயணம் செய்வோர் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

மீன் விற்பதற்கு மாற்று ஏற்பாடுகள் செய்யப்படவேண்டியதுஅவசியம்என்றும், பொது மக்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது விடயத்தில் சம்பந்தப்பட்ட அமைப்புக்கள் உரிய நடவடிக்கை மேற்கொள்வது அவசியம் என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## இராசி பலன்

21-8-2000
(ஆவணி 5 திங்கள்)
சஷ்டி
மு.ப 11.48 வரை
பரணி காலை
9 40 தொடக்கம்
ராகுகலாம்
7. 35- 9.05 வரை
சுபநேரம்
12.05-01.35

**மேடம்**
சுபகாரியம் பிரயாண அலைச்சல், உஷ்ண ரோகம்;

**இடபம்**
புத்தி தடுமாற்றம், காரியம் தடங்கல், எதிர் பாரா வருமானம்

**மிதுனம்**
முயற்சிவெற்றி, பணவரவு, அறிஞர் சந்திப்பு

**கடகம்**
இடமாற்றம், தலைமை தாங்கல், மனக்கவலை.

**சிங்கம்**
அனுதாபச்செய்தி, பொருட் செலவு, வீண் பயம்.

**கன்னி**
எதிர்பாரா விபத்து, கெட்ட பெயர் கேட்டல், பொருள் வரவு

**துலாம்**
திருமணப்பேச்சு, விருந்து பசாரம், காரியம் கைகூடல்

**விருச்சிகம்**
எடுத்த காரியம் தடை, மனக்கிலேசம், திறுலாபம்

**தனு**
இடமாற்றம், புத்திரரால் கவலை, முயற்சி நன்மை.

**மகரம்**
தாய்வழி உறவில் சோகம், வியாதி, பொருள் நட்டம்

**கும்பம்**
தொழிலால் அதிக வருமானம், சென்ற இடத்தில் செல்வாக்கு, குடும்ப சுகம்

**மீனம்**
புதிய முயற்சிஆரம்பித்தல், வீண் விவாதம், மங்களகரமான செய்தி.

[பழைய நேரப்படி கணிக்கப்பட்டது]

வளவன்

## விவசாயிகள் அவதி

(கோப்பாய்)

கோப்பாய் பகுதியில் யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதிக்கு கிழக்கேயுள்ள பகுதிகளில் பயிர்ச்செய்கை மற்றும் நெல்விதைப்பு போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருப்பதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

தற்போதுள்ள அசாதாரண நிலையை அடுத்தே இந்நிலமை ஏற்பட்டுள்ளதாகவும் கூடிய விரைவில்பயிற்ச்செய்கை மேற்கொள்வதற்கேற்ற சூழ் நிலை ஏற்படுத்துவது உரியவர்களின் பொறுப்பு என்றும் பொது மக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது; (க-79)

## வலுவூட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

ஆரம்பக்கல்வி ஆசிரியர்களின் உடல், உள சமூக ஆற்றல்களை மேம்படுத்தும் விதத்தில் இன்றும் நாளையும் வலுவூட்டல் கருத்தரங்கு இடம் பெற உள்ளது.

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இடம் பெறும் மேற்படி கருத்தரங்கில் நாற்பது பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் கலந்து கொள்ள உள்ளனர்;

## காய்ச்சல் வேகமாக பரவுகிறது

(மண்டைதீவு)

வேலணைப் பகுதியில் காய்ச்சல் வலுவேகமாகப் பரவிவருகிறது.

குழந்தைகள் பெரியோர் என்ற பேதமின்றி பலரும் இக்காய்ச்சலுக்கு இலக்காகிய நிலையில் சிகிச்சையின் பொருட்டு மருத்துவமனைகளை நாடிவருவது தற்போது அதிகரித்துள்ளமையும் அவதானிக்க முடிகிறது.

அண்மையில் பெய்தசீரற்ற மழை மற்றும் கடும்காற்று காரணமாக இக்காய்ச்சல் பரவிவருவதாக தெரிய வந்துள்ளது. (உ-82)

2 ஆம் பக்கத் தொடர்ச்சி

13) 19 ஆம் நூற்றாண்டில் இலங்கையில் இடம் பெற்ற கலாச்சார, சமய மறுமலர்ச்சியுடன் தொடர்புற்றசில நிகழ்ச்சிகள் நிரல் 1 இல் இடம் பெற்றுள்ளன. அந்நிகழ்ச்சிகளுடன் தொடர்புற்றவர்களின் பெயர்கள் நிரல் 2 இல் இடம் பெற்றுள்ளன. நிரல் 1 இலுள்ள நிகழ்ச்சிகளை நிரல் ii இலுள்ள பெயர்களுடன் பொருத்தினால் சரியான விடையாக அமைவது எது?

| நிரல் i | நிரல் ii |
|---|---|
| (1) பௌத்த கலாச்சாரம் மேம்படுத்தப்பட்டமை. | A—சேணல் ஒல்கொட் |
| (2) பௌத்த பிரம்மஞான சங்கம் நிறுவப்பட்டமை. | B—சித்திலெப்பே |
| (3) இஸ்லாமிய மத மறுமலர்ச்சி. | C—ஆறுமுகநாவலர் |
| (4) இந்து மத மறுமலர்ச்சிக்கு தலைமை தாங்கியமை | D—பொன் இராமநாதன் |
| | E—அநாகரிக தர்மபால |

(1) ABCD (2) AEBC (3) EABC (4) AEBD

14) தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் சம்மதமின்றி வரிகள் விதிக்கப்படலாகாது என முதன் முதலில் பிரகடனம் செய்யப்பட்டது.
(1) 1689 இல் பிரித்தானிய உரிமைச் சட்டத்தில்.
(2) 1776 இல் அமெரிக்க சுதந்திர பிரகடனத்தில்.
(3) 1791 இல் பிரான்ஸின் அரசியல் யாப்பில்.
(4) 1917 இல் இரஷியப் புரட்சி கொள்கையில்

15) அநுராதபுரக் காலப்பகுதிக்குரிய சந்திர வட்டக் கற்களைப் போலன்றி பொலனறுவைக் காலப்பகுதிக்குரிய சந்திர வட்டக்கற்களில் இடபம் இடம்பெறவில்லை. இதற்குக் காரணம்?
(1) மௌரிய சிற்பக்கலையின் செல்வாக்கு.
(2) இடபத்தின் உருவத்தைச் செதுக்குவது கஷ்டமாக இருத்தல்.
(3) இந்து சமயச் செல்வாக்கு.
(4) அக்கால மக்கள் இடபத்தை இழிவானதாகக் கருதியமை.

16) அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் இயல்புகள் அல்லாத ஒன்று?
(1) ஆள்வீத வருமானம் தாழ் நிலையில் இருத்தல்.
(2) மக்களின் அத்தியாவசியப் பொருட்கள் மலிவு விலையில் கிடைத்தல்.
(3) கைத்தொழில் துறையில் பின்தங்கியிருத்தல்.
(4) அபிவிருத்திக்காக வெளிநாட்டு உதவியை அதிகளவில் பெறும் நாடுகளாகும்.

17) கீழ் தரப்படும் வளங்களில் மிகவும் கவனமாகப் பயன்படுத்த வேண்டிய வளம்?
(1) மனிதவளம் (2) காடு (3) சூரியசக்தி (4) பெற்றோலியம்

18) துரித மகாவலித்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட நீர்த்தேக்கங்களுள் தரைக்கீழ் மின் உற்பத்தியைக் கொண்ட நீர்த்தேக்கம்?
(1) கொத்மலை (2) ரன்தம்பே (3) விக்டோரியா (4) மாதுருஓயா

19. அபிவிருத்தியடைந்து வரும் ஒரு நாட்டுக்கு வெளிநாட்டுதவி தேவைப்படுவதற்கான அவசிய காரணி?
(1) உள்நாட்டுப் போருக்குத் தேவையான ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்கு.
(2) உள்நாட்டு உணவுப் பற்றாக்குறைக்கான உணவுகளை இறக்குமதி செய்து கொள்வதற்கு.
(3) வெளிநாட்டு சிறப்பறிஞரின் சேவையைப் பெற்று அபிவிருத்தியைத் துரிதப்படுத்துவதற்கு.
(4) வெளிநாடுகளில் இலங்கை மக்களுக்கு வேலைவாய்ப்பு பெற்றுக் கொடுப்பதற்கு.

20. நாட்டின் இனப் பிரச்சினையை தீர்ப்பதற்கு மிகப் பொருத்தமான தீர்வு பின்வருவனவற்றுள் எதுவாகும்?
(1) ஆயுதங்களை இரு பகுதியினருக்கும் வழங்கி சமபலத்தை ஏற்படுத்துதல்.
(2) வெளிநாட்டு இராணுவத்தின் உதவியுடன் போர் நடவடிக்கைகளை துரிதப்படுத்துதல்.
(3) இனங்களுக்கிடையே புரிந்துணர்வை ஏற்படுத்தி பேச்சுவார்த்தை மூலம் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
(4) பிரச்சினைக்குரிய இனத்தை நாட்டை விட்டு விரட்டியடித்தல்.

# கல்வியியல் கல்லூரியின் கற்கைநெறி பற்றிய ஓர் விளக்கம்

**திருநாவுக்கரசு கமலநாதன்**
(பீடாதிபதி யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரி)

(நேற்றைய தொடர்ச்சி)

★ க. பொ. த. (சா/த)க்குப் பதிலாக குறிப்பிட்ட துறையில் 10 மாதத்திற்குக் குறையாத கற்கைநெறியை அங்கீகாரமளிக்கப்பட்ட நிறுவனத்தில் பெறலாம்.

| துறைகள் | க. பொ. த. சா/த பெறுபேறு | க. பொ. த உ/த பெறுபேறும் பிறவும் |
|---|---|---|
| நூலகமும் தகவல் துறைக்கல்வியும் | 6 பாடங்களில் சித்தி போதனா மொழி, கணிதம் உட்பட ஆங்கிலத்தில் திறமைச்சித்தி. | ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தி |
| சித்திரம் | 6 பாடங்களில் சித்தி போதனா மொழி, கணிதம், சித்திரம் உட்பட | ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்திரம் உட்பட சித்தி |
| நடனம் [கீழைத்தேச/பரதம்] | 6 பாடங்களில் சித்தி, போதனா மொழி கணிதம், நடனம் (கீழைத்தேச பரதம் உட்பட | ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தி நடனம் உட்பட |
| சங்கீதம் (கீழைத்தேச / கர்நாடகம்) | 6 பாடங்களில் சித்தி போதனா மொழி கணிதம், சங்கீதம் உட்பட | ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தி சங்கீதம் உட்பட |
| ஆங்கிலம் | 6 பாடங்களில் சித்தி போதனா மொழி கணிதம் உட்பட ஆங்கிலம், ஆங்கில இலக்கியத்தில் திறமைச்சித்தி. (சி) | ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தி ஆங்கிலம் உட்பட |
| | அல்லது 6 பாடங்களில் சித்தி ஆங்கிலம், ஆங்கில இலக்கியத்தில் விசேட சித்தி. (டி) | ஒரே அமர்வில் ஏதாவது 3 பாடங்களில் சித்தி |

★ ஆங்கில தகுதிகாண் பரீட்சையில் சித்தி பெறவேண்டும்.

| | | |
|---|---|---|
| உடற்கல்வி | 6 பாடங்களில் சித்தி போதனா மொழி கணிதம் உட்பட | ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தி |

★ தேசியமட்ட விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றமைக்கான சான்றிதழ்கள்

மேற்கூறிய தகுதிகளுடன் க. பொ. த. உயர்தரப் பரீட்சையில்பெற்ற கூட்டுப்புள்ளிகளின் அடிப்படையிலும் தெரிவுகள் இடம்பெறும்.

பொறியியல் துறையில்

# புலமைப்பரிசில் பெற்று அவுஸ்திரேலியா பயணம்



தெல்லிப்பழை. யூனியன் கல்லூரி மாணவன் மகேந்திரராஜா பிரவீணன் அவுஸ்திரேலியாவில் உள்ள 'அடிலெயிற்' பல்கலைக் கழகத்தில் புலமைப் பரிசிலைப் பெற்று கணனி பொறியியல்த் துறையில் பட்டப் படிப்பை மேற்கொள்வதற்காக அவுஸ்திரேலியா சென்றுள்ளார்.

1999 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க. பொ. த உயர் தரப்பரீட்சையில் நான்கு அதிவிசேட சித்தி பெற்று 357 மொத்தப் புள்ளியையும் கொண்டவராவார்.

அவுஸ்திரேலியா பல்கலைக்கழக புலமைப் பரிசிலிற்காக நடைபெற்ற ''ரோபில்'' (TOEFL) ஆங்கிலப் பரீட்சையில் 233 புள்ளியையும் இவர் பெற்றிருந்தார்.

இவர் மாணவனாக இருந்த காலத்தில் கல்லூரிகளில் நடைபெற்ற பல்வேறு இணைப்பாட விதானப் போட்டிகளில் கலந்து கொண்டு பெற்ற 14 தங்கப் பதக்கங்களும், தேசிய மட்டத் தமிழ்த்தினப் போட்டியில் இரு தடவைகள் இவர் பெற்ற முதற் பரிசுகளும் இப்புலமைப் பரிசில் கிடைப்பதற்கு ஆதாரமாக இருந்தன.

இவரது புலமைப் பரிசில்களுக்கான விண்ணப்பங்களை சிங்கப்பூர், ஜப்பான் நாட்டின் பல்கலைக்கழகங்களும் ஏற்று புலமைப் பரிசில் வழங்க முன் வந்தமையும் இங்கிலாந்தின் செவீல்ட், பாத், எடின்பே போன்ற ஆறு பல்கலைக்கழகங்கள் இவரது மேற்படிப்பிற்கு அனுமதி வழங்கியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

பிரவீணன் மகேந்திரராஜா தெல்லிப்பழை விழிசிட்டியைச் சேர்ந்த அளவெட்டி அருணோதயாக் கல்லூரி அதிபர் கி. மகேந்திரராஜா பிரபல தமிழ் எழுத்தாளரும் நாடக அரங்கியல் தயாரிப்பாளரும், வலிகாமம் கல்வி வலய கல்வி அபிவிருத்தி உதவிக் கல்விப் பணிப்பாளருமான திருமதி கோகிலா மகேந்திரராஜா தம்பதிகளின் ஏகபுதல்வனும் ஆவார். (சு)

மட்டு சுவாமி விபுலானந்தர்

# இசைக்கல்லூரி மாணவர்கள் வாரம் ஒருநாள் பகிஷ்கரிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தர் இசை நடனக் கல்லூரி மாணவர்கள் வாரத்தில் ஒருநாள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருப்பதாக கல்லூரி மாணவர் சங்க செயலாளர் பி. நித்தியானந்தன் தெரிவித்துள்ளார்.

மேற்படி மாணவர்கள் கடந்தவருடம் நவம்பர் மாதம் 24ஆம் திகதி முதல் இசை நடனக் கல்லூரியைக் கிழக்குப் பல்கலைக் கழகத்துடன் இணைக்குமாறு கோரி தொடர்ந்து 7 மாதங்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுவந்துள்ளனர்.

இந்து கலாசார திணைக்கள பதில் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசர் பகிஷ்கரிப்பைக் கைவிட்டு விரிவுரைகளிற்கு சமுகமளிக்குமாறும் அவ்வாறு செய்யாதவர்கள் தாமாகவே விலகியவர்களாகக் கருதப்படுவர் என்றும் கடிதம் மூலம் கேட்கப்பட்டதை அடுத்து மாணவர்கள் மேற்படி கல்லூரிக்கு சமுகமளித்தனர்.

எனினும் போராட்டத்தை முற்றாகக் கைவிட விரும்பாத மாணவர்கள் வாரத்தில் ஒருநாள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுவருகின்றனர். (சு-60)

# நாசவேலை புரிவோர் அட்டகாசம் கையறு நிலையில் விவசாயிகள்

(ஈச்சமோட்டை)

வட்டுக்கோட்டை பண்ணாகப் பகுதியில், விவசாயப் பயிர்களையும், விவசாய உபகரணங்களையும் அழித்தொழிக்கும் நாசவேலை புரியும் கும்பல் ஒன்று நீண்டகாலமாக செயற்பட்டு வருவதாக தெரியவந்துள்ளது.

இந் நாசவேலை புரியும் கும்பல்களின் கொட்டமடக்கி, அழிவில் இருந்து தம்மைக் காக்குமாறு மேற்படி பகுதி விவசாயிகள், விவசாய நலன் பேணும் அமைபுக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுடன் தொடர்புகொண்ட போதிலும் சாதகமான நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்படாமையினால் அவ் விவசாயிகள் கையறுநிலையில் துன்பப்படுவதை அவதானிக்க முடிகிறது.

பல கஷ்டங்களின் மத்தியில் பயிர் செய்து, பலன் பெறும் வேளையில், நாசம் புரியும் கும்பல்கள் தமது மோசமான கைவரிசையைக் காட்டிவருவதாகவும், பல காலம் கஷ்டப்பட்டுத் தேடிய சொத்துக்களான விவசாய உபகரணங்களை சேதத்துக்கு உள்ளாக்கி வருவதாகவும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

அத்துடன் விவசாய நடவடிக்கைகள் முன்னெடுப்பதற்கு உகந்த காலநிலை தற்போது நிலவுகின்ற போதிலும், வட்டுக்கோட்டை பண்ணாகப் பகுதி விவசாயிகள் பயிர் செய்கை முயற்சிகளில் ஆர்வம் குன்றி காணப்படுகின்றனர்.

உரத்தட்டுப்பாடு. எரிபொருள் தட்டுப்பாடு, பொருளாதாரத் தட்டுப்பாடெனஎத்தனையோ இடையூறுகளுக்கு மத்தியில் தமது விவசாய நடவடிக்கைகளை நகர்த்திச் செல்லும் விவசாயிகளை, இவ்வாறு உடன் இருந்தே குழிபறிக்கும் கும்பல்களை இனம்கண்டு சட்டத்தின்முன் நிறுத்தவேண்டியது சமூகத்தில் உள்ள அனைத்துத்தரப்பினரதும் கடமையாகும் எனவும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரியுள்ளனர். (சு-59)

## இன்று ஒரு தகவல்

# ஒட்டி உறவாடி வாழ்தல் எம்மை தற்காத்துக்கொள்ளஉதவும்

உலகில் வாழும் உயிரினங்களுள் அனேகமானவை கூட்டம் கூட்டமாகவே வாழ்கின்றன. மனிதன்இதில் விதிவிலக்கல்ல. காட்டிலும் சரி நாட்டிலும் சரி இவை வித்தியாசப்படுவதில்லை விரல்விட்டு எண்ணக் கூடிய உயிரினங்கள தனியாகவும் வாழ்வதை நாம் பார்க்கின்றோம்.

காட்டில் யானை, குரங்கு, மான், ஓநாய் போன்ற மிருகங்கள் கூட்டத்தைப் பிரிந்து வாழ்வதை நாம் அறியவில்லை. எத்தனையோ யுகங்களைக் கண்டிருக்கும் இவ்வுலகம் இவை பிரிந்து வாழ்வதை கண்டதாக இதுவரை எது விதத் தகவலும் இல்லை என்று சொல்லலாம். இவைகள் ஏன் கூட்டமாக வாழ்கின்றன என்பதை அவதானிக்கும் போது எத்தனையோ காரணங்கள் இருக்கலாம்: இவற்றில் இலேசாகக் காணக்கூடியவை உணவை அவை சுலபமாகக் பெற்றுக் கொள்வதும் பாதுகாப்புக்காகத் தம்மை தயார்படுத்துவதாகும்.

காட்டில் வாழும் ஓநாய்கள் தங்கள் உணவைப் பெற்றுக்கொள்வதற்காகவே முக்கியமாகக் கூட்டமாக வாழ்கின்றன. ஒரு ஓநாயினால் ஒரு மிருகத்தைக்கொன்று உண்ண முடியாமல் இருப்பதால் பல ஓநாய்கள் சேர்ந்து மிருகத்தை மறித்துக் கொன்று உண்பதை நாம் அறிகிறோம். ஆகவே ஓநாய்கள் தனித்து வாழ நினைத்தால் இயற்கையானதாக அமைவதில்லை. எல்லோரும் சேர்ந்து ஒத்துழைப்பதன் மூலம் அவை காட்டில் உயிர் வாழ்கின்றன.

ஓர் அடர்ந்த காட்டில் ஓநாய் கூட்டங்கள் வசித்து வந்தன. இவற்றுள் ஒரு ஓநாய் இக்கூட்டத்துடன் சேராமல் தனியாகவே வாழ்ந்து வந்தது. இதனால் அது உணவைப் பெற்றுக் கொள்வது பெரும் சிரமம் அடைந்த பெரிய மிருகங்களைப்பிடித்து உண்பது அதற்குப் பெரிய பாடாய் இருந்தது. ஆகவே சிறியவையான முயல், கீரி, போன்றவற்றைப் பிடித்து தனது உணவாக்கியது.

அடர்ந்த காடாய் இருந்தமையால் அவைகளைப் பிடித்து உண்பதும் அதற்கு இலேசான காரியமாகஇருக்கவில்லை. ஆகவே உணவு விடயத்தில் தான்கொனாத் துன்பமடைந்து அத்துடன் தனிமையாகவே தனது உறைவிடத்தையும் வைத்திருந்தமையால் அதுவும் பாதுகாப்பற்றதாகவே இருந்தது.

எதிரி எப்போது வந்து தாக்குவான் என்று பய சிந்தனையுடனே தனது வாழ்க்கையை நடாத்திச் சென்றது இப்படியாக வாழ்ந்து வரும் போது உணவுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இக்காடு சரிவராது என எண்ணிக் காட்டின் அயலில் இருக்கும் கிராமத்துக்குச் சென்று உணவைத் தேடலாமென எண்ணியது ஒரு நாள் இரவு அங்கு சென்றது. ஓநாய் ஆச்சரியப்படும் அளவிற்கு அங்கு கோழிகளும், ஆடுகளும் நிறைவாக இருப்பதைக் கண்டு மகிழ்ந்தது. இம் மிருகங்களைப் பிடித்து உண்பதற்குக் கூட்டம் தேவையில்லையே என்றும் எண்ணியது.

வெறும் கையுடன் காட்டுக்குச் செல்வதற்கு விருப்பமின்மையால் கொழுத்த ஆட்டைக் கொன்று அதை காட்டுக்குள் கொண்டு வந்தும் விட்டது. உணவு தேவைப்படும் பொழுது இரவில் அக்கிராமத்துக்குள் சென்று தனக்கு விரும்பியவற்றைத் தரம் பிரித்துக் கொண்டு வருவது ஓநாய்க்கு ஒரு சாதாரண நிகழ்ச்சியாயிற்று. உணவுப் பிரச்சினை தீர்ந்து விட்ட மகிழ்ச்சியால் அதன் உடல்களைப் பற்றதாகவும் முதுமை மறைத்து இளமை மாறிடும் தன்மை உடையதாகவும் மாறியது.

இவ்வாறே ஓநாய் தனது உணவுப் பழக்கத்தை வழமையாக்கியது. கிராமத்தில் உள்ள மிருகங்கள் காணாமல் போனதால் மக்கள் விழிப்படைந்தனர்.

நித்தமும் வந்து உணவை ருசிபார்த்து திரும்பிச் செல்லும் ஓநாய் ஒருநாள் வசமாய் மக்களிடையே மாட்டிக் கொண்டது. உறுமியும், பயமுறுத்தியும் பார்த்த ஓநாய், அப்பொழுது தான், தனியாகத் தான் கிராமத்திற்கு வந்து மாட்டிக்கொண்டேனே. கூட்டமாக வந்திருந்தால் மக்கள் ஓநாய் கூட்டத்தைப் பார்த்தே பயந்து ஓடியிருப்பார்கள் என்று எண்ணி வருந்தியது.

பொல்லுகள் தடிகள் சூழ வந்தவர்களினால் அவ் ஓநாய் பதம் பார்க்கப்பட்டது

வாழ்க்கையில் எப்போதும் ஒற்றுமையாய்வாழ்வது எதிரிகளிடமிருந்து எம்மை நாம் தற்பாதுகாத்துக் கொள்ள உதவும்.

தென்கச்சி சுவாமிநாதன்

## இன்று ஒப்படைப்பு

(அச்சுவேலி)

அச்சுவேலி அரசினர் வைத்திய சாலையில் கடமையாற்றும் வைத்தியர்களுக்கென அமைக்கப்பட்ட வதிவிட விடுதிக் கட்டடம், கட்டட ஒப்பந்தக்காரர்களால் இன்று வைத்தியசாலை நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

சுமார் 25 இலட்சம் ரூபா செலவில் நவீன வசதிகளுடன் இவ்விடுதி அமைக்கபபட்டதன் மூலம், அங்கு நிலவி வந்த வைத்தியர்களுக்கான வதிவிட தட்டுப்பாடு நீங்கியுள்ளது.

(உ-14)

## இளைஞன் காயம்

(வவுனியா)

கனகராஜன் குளப்பகுதியில் தனது காணியைத் துப்பரவு செய்துவிட்டு குப்பைக்கு தீ வைத்த வேளை அதனுள் இருந்த மர்மப்பொருள் ஒன்று வெடித்ததில் இளைஞர் ஒருவர் வலது கையில் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

அருளானந்தம் விவேக் (வயது20) என்ற இளைஞரே கையில் காயம் அடைந்த நிலையில் மல்லாவி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார், (ந-7)

## முட்டை விலை வீழ்ச்சி

[யாழ்ப்பாணம்]

தற்போது முட்டை விலை பெருமளவு வீழ்ச்சியடைந்துள்ளது.

9ரூபா வரையில் விற்பனையாகி வந்தமுட்டையின்விலை 6 ரூபா வரை விற்பனையாவதை காணக்கூடிதாய் உள்ளது.

நல்லூர் உற்சவம் ஆரம்பமாகியிருப்பதையடுத்தே முட்டை விலை வீழ்ச்சியடைந்துள்ளது. [உ]

## உல்லாசப் பயணிகளைக் கவர புதிய திட்டம்

வெளிநாடுகளில் இருந்து இலங்கை வரும் உல்லாசப்பயணிகளைக் கிராமப்புறங்களுக் செல்லத் தூண்டும் வகையில் விசேடதிட்டமொன்று அமைக்கப்படவுள்ளது.

இதற்கான ஆயத்தங்களை உல்லாசத்துறை அமைச்சக வட்டாரங்கள் மேற்கொண்டுள்ளன.

கிராமப் புறமக்களின் கலாச்சாரமும், சூழலும் உல்லாசப் பயணிகளை நன்குகவரும்என்பதால், இத்திட்டங்களின் மூலம் கிராம வாசிகளின் வருமானத்தை அதிகரிக்ககூடியும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (உ)

உ

## நல்லூரான் திருவடிக்கு - 17



## விழுந்து கும்பிட வில்லங்கம் இல்லையடி!

நல்லூரரை வலம் வந்தே ஞானத்தங்கமே!
நாங்கள் விழுந்து கும்பிட்டாலடி ஞானத்தங்கமே!
வில்லங்கம் வாராதடி ஞானத்தங்கமே!
விடிவிங்கே சேருமடி ஞானத்தங்கமே!
எல்லாமே தருவானடி ஞானத்தங்கமே!
எங்களுக்கு நல்லூரான் துணையடி ஞானத் தங்கமே!
பொல்லாப்பு ஒன்று மில்லையடி ஞானத்தங்கமே!
பொற்கோயில் வலம் வந்து கும்பிட்டால் ஞானத் தங்கமே!

(மதுரகவி காரை எம். பி. அருளானந்தன்)

## நல்லூர் கந்தன் பாமாலை

அம்புவியில் மக்களுயிர்க் கஞ்சாமல் வாழ்ந்திடவே
தெம்பு தரும் நல்லூரின் செவ்வேளே- நம்புகிறோம்
பொம்பர் ஷெலி ஷெல் புரட்டுகளுக் கஞ்சாமல்
இன்பநிலை வாழ்வழிப்பீர் என்று;

இறைமணி சி. இராசரத்தினம்

## உலகெலாம் உய்ய

குறுநகை யோடிரு சக்தியொடுறையும்
குமரன் நல்லூர்ப் பதியமை வேலன்
ஆறுமுக சரவண சண்முக குகனை
அநுதின மணுகி அருள்பல வேண்டி
நறுமலரொடு பா நாள் பொழு தோதி
நன்மனத் தோடு நீ நலமே வழிபடில்
உறுமுயிர்த் துன்பத் துயரிடர் ஓடும்
உத்தமமானவை உலகினிற் கூடும்.

முருகேசு சிவஞானம்

## எமைக் காக்க முருகா நீவா!

எடுப்பு

மயிலேறி முருகாநீ வா- எங்கள்
துயர் போக்கக் குமரா நீ வா! (மயிலேறி...)

தொடுப்பு

வேலோடு முருகா நீ வா! திரு
மாலோனின் மருகா நீ வா! (மயிலேறி...)

முடிப்பு

சூரனை வதைத்தாயே நீ!
தேவரைக் காத்தாயே நீ;
எம் நிலை அறியாயோ நீ!
எமைக் காக்க உளம் கொண்டு நீ...
(மயிலேறி......)

நாயன்மார்கட்டு ப, மகேந்திரதாசன்

## நாடிடு வோர்க்கு நல்லருள் தருக முருகா

நல்லைக் குமரேசா
நாளும் எமைக் காத்திடுவீர்
விழாக்காணும் வேல் முருகா
வேண்டும் வரம் தந்திடுவீர்
ஆதாரம் நீயல்லால்
நல்லைக் குமரா
நமக்கிங்கு யாருமில்லை
நாடி நிதம் வருவோம்
நல்லைக் குமரா
நமக்கு நல்லருள் தந்திடுவீர்
விழாக்காண வேண்டுமென
நல்லைக் குமரா
விரும்பியாம் வருகின்றோம்
வினைகளெல்லாம் தீர்த்தே
நல்லைக் குமரா
வேண்டிய நல்வரம் தருக;

நீர்வைமணி

## இலங்கையில் வருடாவருடம்

# 7 ஆயிரம் தற்கொலை சம்பவங்கள் 5 ஆயிரம் மட்டுமே பதியப்படுகிறதாம்

### பொலிஸ் தரப்பு அறிக்கை

(கொழும்பு)

இலங்கையில், வருடாந்தம் சராசரியாக 7 ஆயிரம் தற்கொலைச்சம்பவங்கள் இடம் பெற்றுவருவதாக பதிவாளர் திணைக்களம் அறிவித்துள்ளது.

இருப்பினும் இவற்றில் 5 ஆயிரம் தற்கொலைச் சம்பவங்கள்மட்டுமே பதிவு செய்படுவதனால் இதுதொடர்பாக பொலீஸ்தரப்பு வெளியிடும்அறிக்கைகளுக்கும் பதிவாளர்திணைக்கள அறிக்கைகளுக்கும்இடையே வேறுபாடு காணப்படுவதாகவும் பதிவாளர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, தற்கொலை முயற்சியில் ஈடுபடுவோர் தொகையும் வருடாந்தம் பல ஆயிரக்கணக்காக அதிகரித்து வருவதாகவும் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதனிடையே, தற்கொலை முயற்சியில் ஈடுபடுவதற்கான காரணங்களைக் கண்டறிந்து அதனை நிவர்த்திருக்கும் வழிவகைகள் பற்றி தீவிரமாக ஆராயப்பட்டு வருவதாகவும்தெரியவருகின்றது (உ)

## பூசகருக்கு பூசை செய்வதற்கு அனுமதி

நாகர் கோவில் ஆலயத்திற்குச் சென்றுபூசைசெய்வதற்கு பூசகருக்கு அனுமதி வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ் ஆலயமானது சுமார் இரண்டு மாதத்திற்குமேலாக எவ்வித பூசைகளும் இன்றி பூட்டப்பட்டிருந்தது ஏற்கனவே தெரிந்ததே; [க-42]

சந்தனமரக்கடத்தல் விவகாரம்

# 51 பேர் மீதானவழக்கு வாபஸாகியமை

# இந்திய ஜனநாயகத்திற்கு விடப்பட்டசவால்

## மனித உரிமைகள் அமைப்பு கண்டனம்

(புதுடில்லி)

சந்தன மரக்கடத்தல் வீரப்பனால் விதிக்கப்பட்ட நிபந்தனைப்படி, கர்நாடகச் சிறையில் உள்ள வீரப்பனின் சகாக்கள் எனக்கருதப்படும் 51 பேர் வழக்குகள் வாபஸ் பெறப்பட்டமை இந்திய ஜனநாயகத்துக்கு ஏற்பட்ட அவமானம் என மனிதஉரிமை அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

கடந்த 7 வருடங்களாக 'தடா' சட்டத்தின்கீழ் கர்நாடகச்சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 12 பெண்கள் உள்ளிட்ட 51 பேர் மீதான வழக்குகளை விலக்கிக்கொள்ள சிறப்பு நீதிமன்றம் கர்நாடக அரசுக்கு அனுமதி வழங்கியுள்ளது.

இச் செயலானது ராஜ்குமார்என்ற தனி ஒருமனிதனுக்காக இந்தியா தனது ஜனநாயகத்தினையே விலைபேசி விட்டுக்கொடுத்திருப்பதாக தேசிய மனிதஉரிமை ஆணையகம் கடுமையாகச் சாடியுள்ளது

இதேவேளை கடந்த97ஆம் ஆண்டு முதல் மதுரை அறக்கட்டளைசார்பாக மனித உரிமை ஆர்வலர் முகமது பாட்சா கர்நாடகச்சிறையில் வாடும் தமிழர்களை விடுவிப்பதற்கு மேற்கொண்ட ஜனநாயக வழிமுறைகள் உயர் நீதிமன்றத்தால் உதாசீனம் செய்யப்பட்ட நிலையில் இடைநிறுத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன், மேற்படி 21பேர் மீதான தடா வழக்குகள் விலக்கிக்கொள்ளப்பட்டால் இதேவழக்குகளை சந்தித்துவரும் ஏனையோரும் ஏன் விடுவிக்கப்படக்கூடாது எனும் கேள்விகளும் பாதிக்கப்பட்டோர்சார்பாக எழுந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

உலக தரிசனம்

வீரப்பனால் இனம்காட்டப்பட்டவர்கள் என்பதற்காக மேற்படி 21 பேர் மீதான குற்றச்சாட்டுகளும் வாபஸ் பெறப்படுமானால், தடா சட்டத்தின்கீழ் குற்றம்சாட்டப்பட்ட மற்றையவர்களை விடுவிப்பதற்காக வீரப்பன் காட்டியவழிமுறையில் இறங்குவதற்கு மேலும்பல வீரப்பன்களை உருவாக்கும்செயல் இதுவெனவும் ஜனநாயக ஆர்வலர்கள பலரும் கருத்து வெளியிட்டுள்ளமையும் இங்கு நோக்கத்தக்கது.

எதுஎப்படிஇருப்பினும், நடிகர் ராஜ்குமார் என்றதோர் தனிமனிதனுக்காக இந்தியா இதுவரைகாலமும் கட்டிக்காத்துவந்த ஜனநாயகப் பண்பு விலைபேசப்பட்டிருப்பது மறுக்கமுடியாதது எனவும் நோக்கர்கள் தெரிவித்துள்ளனர். (உ)

## புதிய அதிபர் தெரிவு

(கரகாஸ்)

வெனிசுவலா நாட்டில் அதிபர் தெரிவுக்கான தேர்தலில் கியூ வாட்சகர் வெற்றி பெற்று புதிய அதிபராகத் தெரிவு செய்யப்பட்டார்.

6 ஆண்டுகள் தொடர்ந்து அதிபராக இவர் சேவையாற்ற இருக்கிறார்

தன் புதிய உரையில் ஏழைகளின் நலன்களுக்காகவும், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காகவும் பாடுபடுவேன் என்று அதிபர் கியூ வாட்சகர்குறிப்பிட்டார். (து)

# வறுமையால்மரணங்கள்மலிவதைத்

# தடுக்க இளைஞர் பங்கு அவசியம்

## இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் வேண்டுகோள்

[வத்திக்கான்]

பசிக் கொடுமை காரணமாகவும் கல்வி அறிவின்மை காரணமாகவும் வேலையில்லாக் கொடுமையாலும் மக்கள் மரணமடைவதற்கு எதிராக இளைஞர்கள் பங்களிப்பு அவசியம் என்று பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் கேட்டுக் கொண்டார்.

உலகக்கத்தோலிக்க இளைஞர்தினநிகழ்ச்சியை ஆரம்பித்துவைத்து பேசுகையில் வன்முறை அழிவுகளின் கைப்பொம்மைகளாக இளைஞர்கள் இருக்கக்கூடாதென்றும் அதேவேளை சமாதானத்துக்காகத் தியாகங்கள் செய்யவும் ஆயத்தமாகஇருக்க வேண்டும் என்றும் பாப்பரசர் குறிப்பிட்டார்.

இந்த விழாவில் சுமார் 20 இலட்சம் பேர் கலந்துகொண்டார்களென்று தெரிக்கப்படுகிறது. [து]

## உலகில் மிக நீளமான தலைமுடி வளர்க்கும் சீன இனத்தவர்

### கின்னஸிலும் பதிவாம்

(தாய்லாந்து)

உலகிலே நீளமான தலைமுடியை உடைய ஆண் என்று கின்னர்ஸ் உலக சாதனை படைத்தவர் ஹூசெங்க்லா ஆவார்.

3 87 மீட்டர் நீளம் கொண்ட முடியை உடைய இவர் தாய்லாந்து நாட்டைச் சேர்ந்த சியாங்மாயில் வசிக்கும் சீன இனத்தவராவர்.

79 வயதுடைய இவர் தனது முடியை 57 வருடங்களாக வளர்த்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (து)

# சையாத் சட்டத்தை ஆதரித்து

# நைஜீரியாவில் பெரும் ஆர்ப்பாட்டம்

## இலட்சக்கணக்கானோர் பங்குபற்றினர்

(கடுனா)

நைஜீரிய மாநிலமான சொகுலாவின் தலைநகர் கொட்டெகரியில் லட்சக்கணக்கான முஸ்லிம்கள் ஒன்றுகூடி அரச ஆதரவு ஆர்ப்பாட்டம் ஒன்றினை நடாத்தியுள்ளனர்.

அம் மாநிலத்தில் வாழ்ந்துவரும் முஸ்லிம் மக்களுக்கு ஆதரவாக ஆளும் அரசால் தற்போது நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டுள்ள சையாத் சட்டத்தை ஆதரித்தே இவ் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது.

இதேசமயம், மேற்படி சையாத்சட்டம் கிறிஸ்தவர்களது நலன்களுக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளதாக சுட்டிக்காட்டி, போர்லோ மாநில கிறிஸ்தவ பாதிரிமார் மூன்றுநாள் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றினையும், தமது நலன் வேண்டி இறை வழிபாடுகளையும் ஏற்பாடு செய்துள்ளனர். (உ)

## ஊழலிற்கு எதிராக சீனாவில் திரைப்படம்

### சகலரும்பார்க்கவேண்டுமெனபணிப்பு

[பீக்கிங்]

சீனாவில் ஊழலுக்கு எதிராக திரையிடப்பட்டிருக்கும் உள்ளூர் திரைப்படம் ஒன்றினை, சீன அதிகாரிகள் அனைவரும் பார்க்க வேண்டும் என சீன அரசு கட்டளை பிறப்பித்துள்ளது.

வாழ்வாசாவாஎனப்பெயரிடப்பட்டிருக்கும் இவ் உள்ளூர் திரைப்படமானது நகராட்சி மன்றத் தலைவர்ஒருவர் ஊழலுக்குஎதிராக தனதுமனைவி மற்றும் உறவினர்கள் அதிகாரிகளை எதிர்த்துப் போராடுவதை மையக்கருவாகக் கொண்டது.

சீனாவில் துணைத்தலைவர் ஒருவருக்கு அண்மையில் ஊழல் குற்றச் சாட்டுக்காக மரண தண்டனை வழங்கியிருக்கின்ற இவ் வேளையில் மேற்படி திரைப்படம் சகல தரப்பினரிடையேயும் நல்வரவேற்பைப் பெற்றுள்ளது. [உ]

## அரிசிக்குள் நச்சுக்கிழங்கு

### பெருமளவு அரிசிப் பொதிகள் நாசம்

(ரோக்கியோ)

ஜப்பானில், அரசிக்குள் நச்சுக்கிழங்கு கண்டெடுக்கப்பட்டதையடுத்து 5 இலட்சத்து 50 ஆயிரம் டொலர் பெறுமதியான அரசிப்பொதிகள் வாபஸ் பெறப்பட்டுள்ளன.

ஜப்பான் மருத்துவமனை ஒன்றின் நோயாளர் பாவனைக்கென அனுப்பப்பட்ட அரிசியில், 6 மில்லிமீற்றர் நீளமான சிறுபுக்கிழங்கை தாதி ஒருவர் கண்டெடுத்ததையடுத்தே ஜப்பானின் அரிசி பொதிசெய்யும் நிறுவனம் மேற்படி பெருந்தொகை அரிசியை வாபஸ் பெற்றுள்ளது.

கடந்தவாரம் ரோக்கியோவில் குடும்பப்பெண் ஒருவர் தக்காளிப்பழரசத்தில் ஈ ஒன்றைக் கண்டு பிடித்ததையடுத்து 6 இலட்சத்து 10 ஆயிரம்தக்காளி பழ ரசப் போத்தல்கள் வாபஸ் பெறப்பட்டமைகுறிப்பிடத்தக்கது. [உ]

## அமெரிக்க ஜனாதிபதி மீது

# விரைவில் வழக்குத் தாக்கலாகும்

# மொனிக்கா லுவின்சி காரணமாம்

(வாஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி, பில்கிளின்டன், தனது பதவியின் கட்டுக்கோப்புகளுக்கு உட்படாத வகையில் பொய் கூறியதான வழக்கு அவர் பதவியில் இருந்து விலகிக்கொண்டதும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

வெள்ளை மாளிகையின் முன்னாள் பணியாளர் மொனிக்கா லுவின்ஸ்கியினுடனான தொடர்புகளை நீதிமன்ற விசாரணைகளின் போது கிளின்டன் மறுத்துவந்த போதிலும் பின்னர் உண்மையினை ஒத்துக் கொண்டிருந்தார்.

இதனையடுத்து, நாட்டின் ஜனாதிபதியாக பதவி வகிக்கின்ற ஒருவர், சட்டதிட்டங்களிற்கு முரணான வகையில் பொய் பேசியமை தொடர்பாக வழக்குத் தொடுக்கப்பட்டிருந்தது.

இருப்பினும் அவரது பதவிக்காலம் முடிவடைந்த பின்னரே இவ் விசாரணைகளை நடாத்த முடியும் என இது தொடர்பாக நியமிக்கப்பட்ட ஆணைக்குழு முடிவு செய்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டனின் பதவிக்காலம், அடுத்த வருடம் ஜனவரி மாதம் 20 ஆம் திகதியுடன் முடிவுக்கு வருவது குறிப்பிடத்தக்கது. (உ)

## பிஜியின் முன்னாள் பிரதமர்

# ஆட்சிக் கவிழ்ப்பு விவகாரம்

# விசாரணை செய்ய நீதிபதி மறுப்பு

(சுவா)

பிஜியின்முன்னாள் பிரதமர் மகேந்திர செளத்திரியின் ஆட்சிக்கவிழ்ப்பு தொடர்பாக விசாரணைகளுக்கென சுவா நகர்நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டவர்களை விசாரணை செய்ய மேற்படி நீதிமன்ற நீதிபதி மறுத்துவிட்டதாக தெரிய வந்துள்ளது.

இதனால் விசாரணைகள் வரும் 04 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதுடன் வேறு ஒரு நீதிபதியும் விசாரணைகளை நடத்த நியமிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி குற்றச்சாட்டு தொடர்பாக நீதிமன்றில் நிறுத்தப்பட்ட பிஜி கிளர்ச்சிக்குழுத் தலைவர் ஜோர்ச்ஸ்பைட் உள்ளிட்ட 11 பேரில் ஒருவர் தனது உறவினர் என்ற காரணத்துக்காகவே நீதிபதி விசாரணைகளை நடத்த மறுத்திருப்பதாக பிஜி செய்திகள் தெரிவித்துள்ளன. (உ)

## இந்தியாவின் தகவல் துறை

# 10 ஆண்டுகளில் அதீத வளர்ச்சிபெறும்

## பிரமோத் மகாஜன் தெரிவிப்பு

இந்தியா 2010 ஆண்டுக்குள் தகவல் தொழில் நுட்பத்துறையில் உலகில் அதீத வளர்ச்சி பெறும் என மத்திய தொழிநுட்பத் தகவல்த்துறை அமைச்சர்பிரமோத் மகாஜன் கூறியிருக்கிறார்.

புவனேஸரில்மென்பொருள் பூங்கா ஒன்றைத் தொடக்கி வைத்த அவர் தகவல்தொழில் நுட்பம் உலகம் முழுவதையும் மாற்றிவிட்டதுஎன்றார்.

8 ஆண்டுகளுக்கு முன்பு இத்துறையில் இந்தியா 200 கோடி ரூபா மட்டுமே பெற்றது என்றும் இந்த ஆண்டு இதே வருமானம் 20 ஆயிரம் கோடி ரூபா அளவிற்கு உயர்ந்துவிட்டது என்றும் தெரிவித்தார்.

மனிதகுலத்தகவல்தொடர்முறையில் 4 ஆம் தலைமுறையாக மென்பொருள் தொழில் நுட்பம் வளர்கிறது என்றும் அந்த விழாவில் அமைச்சர் சுட்டிக்காட்டினார். (து)

கருவியும் காலமும் செய்கையும்செய்யும்
அருவினையும் மாயுண்டது அமைச்சு
-குறள்

# வலம்புரி

**மாதம் மும்மாரிபோல்**

அமைதி வாழ்வின் ஆடிநாதத்தை அனுபவித்த காலங்களில் அரசயந்திரம் உராய்வின்றி இயங்கியது. மாதம் மும்மாரி பொழிந்தது. சுகமான வாழ்வு சோபித்தது.

இன்றைக்கு வோட்டு வியாபாரம் தொடங்குகின்ற வேளை கலகலப்பாக நாடு இருப்பதாகத் தெரிகிறது. வரவேற்கத்தக்க, பாராட்டத்தக்க விடயம். ஆனால் ஒன்று இத்தகைய நடவடிக்கைகள், அசுர வேக ஆணைகளும் அணைப்புகளும் கடந்த காலங்களிலும நடந்தால் நன்றாக வருந்திருக்கும். எவ்வாறாயினும் இப்பவாகுதல் துடிப்பும் பிடிப்பும் வந்தமைக்கு நன்றி. இன்று போல் மாதமொரு முறை குறைகேள் செயலமர்வு நிகழ்ந்தாலும் ஆரோக்கியமாகத் தான் இருக்கும்.

ஒரு உண்மை உயரதிகாரிகளுக்குப் புரிந்திருக்க வேண்டும். யாழ். நகரிலிருந்து பிற இடங்களுக்குப் போக ஆறுமாதத்திற்கு மேல் தவங்கிடக்க வேண்டும். அதுவும் எத்தனை அல்லல்கள். எத்தனை கையூட்டுக் கைங்கரியங்கள். இவை ஒருவாறு தணிக்கப் பட்டிருப்பது கண் கூடு.

எங்கள் மண்ணில் ஓய்வு பெற்ற பின் தமது ஆழமான அறிவையும் அனுபவத்தையும் கொடுக்க அலையும் வருகை விரிவுரையாளர்கள் பற்றி குறிப்பிட்டாக வேண்டும். வருடக்கணக்காக வேதனமின்றி வேதனையுடன் வேலை செய்பவர்கள். தொழில் நுட்பக்கல்லூரியிலும சரி உயர் தொழில் நுட்பக் கல்லூரியிலும்? நிலமை ஒன்று தான்.

டேக்பாரில்லாத நிலையில் நிர்வாக இயந்திரங்கள் இறுகிஸ்தம்பித்துவிட்டன போலும். இதே போல பலதுறைகளிலும் துன்பப்படு பவர்கள் ஏராளம். இடமாற்றம் பெற்றவர்கள் முன்னுரிமையுடன் குறித்த திகதிக்குள் பிரயாணம் செயய் முடியாத அவல நிலை. நேர்முகப் பரீட்சை, எழுத்துப் பரீட்சை, கல்வி சமபந்தமாகச் செல்வோர் எத்தனை பல்லுக்காட்டவுக்கு மத்தியில் செல்ல வேண்டியிருக்கிறது.

மேலே குறிப்பிட்ட குறைகள் போல் எத்தனையோ குறைகள்நிறைவு செய்யப்படாது இருக்கின்றன. ஆட்சி என்றால்மாட்சிமை தங்கியதாக இருக்க வேண்டும். அரச இயந்திரம் நீதியின் பால் நிற்க வேண்டும். மனிதாபிமானம் நிரம்பியதாய் சுமுக நிலையைப் பேண வேண்டும்.

**அன்புடன் ஆசிரியர்**

# இளம் சந்ததியை நாசம்செய்யும் சினிமாமோகம்

# நம் கலாசாரத்திற்கும் வேட்டு வைக்குமா?

யாழ்ப்பாணக் கலாசாரம் 'சந்தபுராணக் கலாசாரம்' என அறிஞரும் ஆர்வலரும் கற்றோரும் மற்றோரும் வியந்து போற்றியது ஒரு காலம்.

சிவபூமி எனச் சித்தர்கள் வாழ்த்தி வணங்கியதும் ஒரு காலம். இன்றைக்கு இந்த நிலைகள் இல்லை இன்றைய யாழ்ப்பாணத்தவர் போக்கு மேற் சொன்ன காலம் ஒன்று இருந்ததா என ஐயுறும் அளவுக்கு மாறிவிட்டது.

முன்பு நிலவிய ஒழுக்கம், கட்டுப்பாடு, பண்பாடு எல்லாம் எங்கோ ஓடி மறைந்து இது 'சினிமாக் கலாசாரமோ' வெனப் புருவமுயர்த்திப் பார்க்குமளவுக்கு இந்திய மூன்றாம் தர சினிமாவின் தாக்கம் எம்மவர் மத்தியில் வலுவேகமாய் வேரூன்றி வருவது நிதர்சனம்.

**இளைஞர் குழாம்**

நாட்டைக் காக்க வேண்டிய எமது இளைஞர் குழாம் மந்தை போல மனம் போன போக்கில் அலைகின்றது.

சிந்தித்துச் சீரிய வழியில் செயற்பட வேண்டியவர்கள் சந்திக்குச் சந்தி மந்திபோல் குந்தியிருக்கிறார்கள்.

சினிமாப் படங்களில் வருகின்ற கதாநாயகர்களாய் தம்மை எண்ணி கண்ணிய மற்ற காவாலித்தனம் புரிகிறார்கள்.

வலுவுள்ள இளைஞர் தாம் தாய் நாட்டின் சொத்துக்கள் தேடரிய நல்முத்துக்கள் என்ற எண்ணப்பாட்டை மறந்து, பண்பற்ற விதத்தில் பாடித் திரிவதிலும் சிந்தனையைக் கெடுக்கவல்ல சினிமாவைப் பார்த்துப் பொழுதைக் கழிப்பதிலும் பொன்னான நேரத்தைச் செலவிடுவதேன்?

ஏன்இந்த மாற்றம்? ஏற்றம் பெற வேண்டியவர்கள்ஏமாற்றப் பட ஏது காரணம?

பாரதி கண்ட புதுமைப் பெண்களாக, நிமிர்ந்த நன்னடையும் நேர் கொண்ட பார்வையும் ஞானச் செருக்கும் பெற்ற செம்மை மாதர்களாய் திகழ வேண்டியவர்கள் அழகுப் பதுமைகளாய் வீதியுலா வருவதற்கும், அரைகுறையாடையிலே சிருங்காரம் காட்டுதற்கும். நாகரிகம் என்ற போர்வையில் தாய் நாட்டின் தன்னிகரில்லாத் தனித்துவங்களை மறந்து, அந்நியர் ஆடையிலும அவர் தம நடையுடை பாவனைகளிலும் மோகம் கொள்ள யாது காரணம்?

சினிமாத் திரைப்படங்கள் தான் தமிழர் பண்பாட்டை, பண்பை, கலையை, கலாசாரத்தை எங்களிடையே இருந்து அகற்றி, அந்நியப் படுத்தி அடுத்தவரின் பண்பற்ற நாகரிகத்தின் மேல் மோகத்தை உண்டு பண்ணுகிறது என்று கூறினால்மிகைப் படுத்தப்பட்ட கூற்றாகாது.

அன்றைக்குஎங்கள்பாட்டுக் கொரு புலவன் விம்மி மனம் வெதும்பினானே துணிவெளுக்கச் சாம்பருண்டு மனம் வெளுக்க மார்க்க மில்லை என்று அது இந்த நிலையைப் பார்த்துத் தான் போலும்.

**நாகரீகம்**

'நாகரிகம் மனிதனது பண்பாட்டுக் கலாசாரங்களோடு ஒட்டி உறவாட வேண்டும், அவ்வாறன்றி கலாசார சமூகச் சீரழிவைக் கொண்டு வருமேயானால், அது குப்பையில் தூக்கி வீசப்பட வேண்டியதன்றி ஏற்றிப் போற்ற ஏதொரு காரணமும்இல்லை.

எங்களுடைய செந்தமிழ் நாட்டுத் தமிழிச்சிகள் சேலை கட்டத் தயங்குவதேன்? பஞ்சாப் ஆடை கண்ணை மறைத்து விட்டதோ?

இதனைச் சுட்டிக் காட்டினால் அதுவும் அடக்கமான ஆடை என்பது எம்மவர் வாதம்.

ஏன் ஜப்பான் நாட்டுக் 'ஹிமோனோ' எனப்படும் அவர்தம் பாரம்பரிய உடை கூட அடக்கமான ஆடை தானே, அதை அணிவதற்கு மட்டும் தயக்கம் ஏன்?

இவர்களது நோக்கமெலாம் தமது அலங்காரங்களால்மற்றவர்களைக் கவர்வதன்றி வேறொன்றுமில்லை. இப்படியானவர்கள் சினிமாவில் வருகிறது என்பதற்காக நாளைக்கு, அரைக்காற் சட்டை அணிந்து வீதியில் அலையமாட்டார்கள் என்பதற்கு என்ன நிச்சயம்?

**இப்படித் தான் வாழ வேண்டும**

எப்படியும் வாழலாம்என்ற நிலை போய், எமது பண்பாட்டுக் கலாசாரங்களைப் பேணி, இப்படித்தான் வாழ வேண்டும் எனும் நிலைப்பாடு சினிமாபபடங்கள் இருக்கு மட்டும் எம்மவர் மத்தியில் தோன்ற வாய்ப்பில்லை.

இன்று எங்கள் இளம் பிள்ளைகள் பத்திரப்படுத்திவைத்திருப்பது சினிமாப்பட கதாநாயக நாயகியருடைய பல வர்ண புகைப்படங்கள்தான்.

அவர்களது வர்ணம் பூசிய போலிமுகங்களைப்பார்த்துப் பெருமூச்சுவிடுதலிலும் அவர்தம் அலங்காரப் புன்னகையைத் தம்மை மறந்து ரசித்தலிலும் நாளும் பொழுதும் செலவிடுகிறார்கள்.

இது ஒருவீண் முயற்சி என்பது நன்றாகவே தெரிந்தும் மீள முடியாது தவிக்கிறார்கள். இது ஏன்?

சினிமா எமது சிந்தனையைத் திசைதிருப்பி விட்டுள்ளது. வாழ்வின் நல்ல பக்கங்களைத் தரிசிப்பதற்கு இது வோர் முட்டுக்கட்டை.

சீரிய சிந்தனையையும் நேரியபார்வையையும் கூரிய நோக்கையும்சினிமாத்திரைப் படங்கள் ஒருபோதுமே ஊட்டமாட்டா.

மாறாக கண்டதே காட்சி கொண்டதே கோலம் எனும் நிலைப் பாட்டிற்கு எம்மை அழைத்து வந்திருக்கிறது.

திரைப்படங்களில் வரும் சம்பவங்கள் உண்மைக்கும் புறம்பானவை வேண்டாத கற்பனை நிஜ வாழ்விற்குஒவ்வாதவை என்பதெல்லாம் அறிந்துதிருந்தும் அவர்களை அறியாமலே இந்தச் சினிமாத் திரைப்படங்கள் மேல்,

அதில் வருகின்ற நாயகநாயகியர் மேல், அவர்கள் புரிகின்ற காதல் மேல் இருக்கின்ற நாட்டத்தை சினிமாக் கொட்டகைகளைப் போய்ப் பார்த்தால் அங்கிருக்கும் தலைகளின் எண்ணிக்கை ஊர்ஜிதம் செய்யும்.

இவற்றையெல்லாம் ஊக்கப்படுத்தும்வகையில், யாழ்ப்பாணத்தில் திரையரங்குகளும் அவற்றுக்குப்பக்கதுணையாக மினி திரையரங்குகளும் நாளுக்கு நாள் புதிதுபுதிதாக முளைவிடுகின்றன.

இருப்பினும் நீதியைச் சுட்டிக்காட்டி, நியாயத்தைத்தட்டிக் கேட்டு அநீதியைச் சுட்டெரிக்க வேண்டிய பத்திரிகா தர்மத்தினின்றும் விலகி இவை சமூகத்தைச்சீரழிக்கும் ஒரு செயலுக்குத் துணை போக மாட்டா என்பதுஎமது நம்பிக்கை.

குழந்தைகளுக்கு அழகிய தமிழ் நாமம்புனைந்து மகிழ்ந்திருந்த யாழ்ப்பாணத்துப் பெற்றோர்களின் மனோ நிலைகூட மாறிவிட்டது.

தங்களது செல்வக்குழந்தைகளுக்கு பணத்திற்காக தன் மானத்தை விற்கின்ற தரங்கெட்ட சினிமாக்காரர்களது கருத்தற்ற பெயர்களை இடுவதில் அவர்களது கருத்தெல்லாம் செல்கிறது.

குழலிலும் யாழிலும் இனிய மழலைமொழி பேசுகின்ற குழந்தைகளிடத்தும் பள்ளி செல்லும் பாலகர் நாவிலிருந்தும் நாற்ற மடிக்கும் சினிமாப் பாடல்கள்

ஏதுமறியாத சிறுபிள்ளைகள் இடத்திலேயேசினிமா பாடல்களின் செல்வாக்கு இவ்வளவு தூரம் உயர்ந்து நிற்கையில் இளைஞர் மட்டத்தவரது நிலைப்பாடு சொல்லித்தெரிய வேண்டியதில்லை

தெய்வீகக் காதல் உண்மைக் காதல்புனிதக் காதல் என்றெல்லாம் எம் முன்னோர்கள் ஏற்றிப்போற்றியகாதல்இன்று சினிமாவூடாக வர்த்தகப் பொருளாக்கப்பட்டு கடையில் இலோ என்ன விலை என்று கேட்கும் நிலையினை எட்டியுள்ளது.

இந்நிலை தொடருமானால் எதிர்காலத்தில் தந்தை பெயர் அறியா தாயின் முகமறியா பிள்ளைகள் எம்மிடையே அதிகரித்து முழு நாட்டையுமே இழி நிலைக்கு இட்டுச்செல்லும் நாள் வெகு தூரத்தில் இல்லை என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை சினிமா எமது சமூகத்தை பீடித்திருக்கின்ற புற்றுநோய் ஒரு காலத்தில் அடக்கி கட்டுப்பாட்டில் வைத்திருந்த போதிலும் இன்று மீண்டும் நச்சுப்பாம்பாய் தலை விரித்தாடுகின்றது

இந்நோயின் தாக்கம் இன்னும் அதிகரித்துச் செல்லுமானால் நமது சமூகமே நோய் பிடித்த சமூகமாகும் ஆரோக்கியமான சமுதாயம் வலுவிழந்து போகும். தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா என்ற நிலை போய் தமிழன் என்றோர் இனம் இருந்ததா எனத் தலை நிமிர்த்தி பார்க்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை தோன்றும்

எனவே தமிழும் தமிழ்க் கலாசாரமும் அதன் பண்பாட்டு விழுமியங்களும் அழிந்து போகாமல் காப்பாற்ற வேண்டியது சமூகத்தின்பால் அக்கறை கொண்ட அனைவரினதும் அவசரமும் அவசியமான கடமையாகும்.

**★ அச்சுநகர் உமா ★**

# இஸ்ரேல்-பாலஸ்தீன பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க முயற்சி

## அமெரிக்கதூதுவர் இஸ்ரேல் விஜயம்

(ஜெருசலேம்)

முறிவடைந்த காம்டேவிட் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பதற்குரிய சாத்தியப்பாடுகள் பற்றி ஆராயுமுகமாக அமெரிக்க இராஜதந்திரி டொனிஸ்ரோ இஸ்ரேல் போய்ச்சேர்ந்தார்.

இதேவேளை தங்கள் தங்கள் நியாயங்களை எடுத்துரைத்து அணிசேர்ப்பதற்காக இஸ்ரேல் பிரதமரும் பாலஸ்தினத் தலைவர் ஜாஸீர் அரபாத்தும் பல நாடுகளுக்கு சூறாவளிபயணம் மேற்கொண்டிருக்கிறார்.

இதேவேளை சம்பந்தப்பட்ட இருநாட்டு தலைவர்களும் பேச்சுவார்த்தைக்குரிய மனப்பக்குவம் அடைந்துள்ளதுடன் சமாதானரீதியில் பிரச்சினையைதீர்க்க விரும்புகிறார்களென்று அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்.

இஸ்ரேல் வந்திருக்கும் அமெரிக்க தூதுவர் பிரதமர் மற்றும் அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடத்துவாரென்றும் பாலஸ்தீனத்துக்குச் சென்றும் அங்கு அரபாத் முதலானோருடன் பேச்சுக்கள் நடத்துவாரென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதையடுத்து இருவாரங்கள் மத்திய கிழக்கில் தங்கி இனி நடக்கும்பேச்சுக்களுக்கு ஏற்பாடுகள்செய்வார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(து)

# கண்களைக் கட்டிக் கொண்டு சிற்பங்களை செதுக்கும் அதிசயம்

[மும்பை]

கண்களைக் கட்டிக் கொண்டு சிற்பங்களை செதுக்கும் அதிசயம் மும்பையில் அண்மையில் இடம் பெற்றுள்ளது.

மும்பையைச் சேர்ந்த ராமபென் சதிஸ்பாஸ் இப்படிக் கண்களைச் கட்டிக்கொண்டு சிற்பங்களைச் செதுக்கிக் கொண்டிருக்கிறார்.

ஆயிரக்கணக்கான பிள்ளையார் சிலைகளை கண்களைக் கட்டிக்கொண்டு இவர் செதுக்கி யுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

[து]

## சுயேட்சை வேட்பாளர்களுக்கு 2 ஆயிரம் ரூபா கட்டுப்பணம்

[கொழும்பு]

எதிர்வரும் பொதுத்தேர்தலில் சுயேட்சை வேட்பாளர்களாகப் போட்டியிடுபவர்கள் தலா 2 ஆயிரம் ரூபா கட்டுப்பணம் செலுத்த வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல்கட்சிமூலமாகவோ சுயேட்சைக் குழுக்களாக போட்டியிடுபவர்கள் அந்தந்த தேர்தல் மாவட்டங்களுக்குஉரிய எம்.பிக்களின் தொகைக்கு மேலதிகமாக மூன்று வேட்பாளர் பட்டியலை நியமிக்க வேண்டும்.

அதன் பிரகாரம், 21 தேர்தல் மாவட்டங்களில் உள்ள எம். பிக்களின் எண்ணிக்கை வருமாறு:

| மாவட்டம் | மொத்த எம்.பிக்கள் |
|---|---|
| ★ கொழும்பு | 20 |
| ★ கம்பஹா | 18 |
| ★ களுத்துறை | 10 |
| ★ கண்டி | 12 |

| | |
|---|---|
| ★ மாத்தளை | 05 |
| ★ நுவரேலியா | 07 |
| ★ காலி | 10 |
| ★ மாத்தறை | 08 |
| ★ அம்பாந்தோட்டை | 07 |
| ★ யாழ்ப்பாணம் | 09 |
| ★ வன்னி | 06 |
| ★ மட்டக்களப்பு | 05 |
| ★ திகாமடுல | 07 |
| ★ திருமலை | 04 |
| ★ குருநாகல் | 15 |
| ★ புத்தளம் | 08 |
| ★ அநுராதபுரம் | 08 |
| ★ பொலனறுவை | 05 |
| ★ பதுளை | 08 |
| ★ மொனராகலை | 05 |
| ★ சப்பிரகமுவ | 10 |
| ★ கேகாலை | 09 |

## வவுனியா...

தெரியவருவதாவது,

வவுனியா மன்னார் வீதியில் தேடுதல் நடவடிக்கைகளுக்காக இராணுவத்தின் இரு அணிகள் சென்றபோது எதிர் பாராதவிதமாக அடையாளம் காணாது இருதரப்பும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது. [வ]

## மத்திய...

சிகிச்சை பெற்றுவரும் குமாரமங்கலத்திற்கு இரத்தப் புற்றுநோய் ஏற்பட்டுள்ளதாகவும் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து வருவதாகவும், இரத்த அழுத்தம் குறைந்து வருவதாகவும் இவருக்கு தீவிரசிகிச்சைபிரிவில்சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் அவ் மருத்துவமனையின் கண்காணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அமைச்சர் குமாரமங்கலத்தை இந்திய பிரதமர் வாஜ்பாய் நேற்று மருத்துவமனை சென்று பார்வையிட்டார். (வ-வி)

## தமிழ்...

மக்களின் பிரச்சினைகள் பற்றி விசுவாசமான குரல் ஒலிக்க வேண்டும். அமரர் குமார் பொன்னம்பலம் விட்டுச் சென்ற அடிச்சுவட்டில் நாம் எமது அரசியலை வழி நடத்திச் செல்ல விரும்புகிறோம்.

மிதவாதக் கட்சிகளுடன் இணைந்து போட்டியிட்டால்

### கிழக்கு பல்கலைக்கழகத்தில்

# தாதி டிப்ளோமா கற்கை நெறியை பூர்த்திசெய்தும் பதவிஉயர்வுஇல்லை

### அமைச்சர்களிடம் முறையீடு

(மட்டக்களப்பு)

கிழக்கு பல்கலைக்கழகத்தின் அடிப்படைத்தாதி டிப்ளோமா கற்கைநெறிப் பயிற்சியில் சித்தியடைந்த தாதியர்களுக்கு இதுவரை பதவி உயர்வு வழங்கப்படவில்லை.

இது குறித்து சுகாதார மற்றும் சுதேசிய வைத்திய துறை அமைச்சர் நிமால் ஸ்ரீ பாலடிசில்வா, துறைமுக அபிவிருத்தி புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப் ஆகியோருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாக மேற்படி கற்கை நெறியில் சித்தியடைந்ததாதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இக் கற்கை நெறியைப் பூர்த்திசெய்த ஆண்களுக்கு விடுதி மாஸ்ரர் என்ற நியமனமும், பெண்களுக்கு விடுதி சகோதரி என்ற நியமனமும் வழங்கப்படவேண்டும்.

இந்நியமனம் வழங்கப்படாததால் இரண்டாம்தரத்தாதிகளாக இவர்கள் மட்டக்களப்பு, மன்னார், திருகோணமலை, பேராதனை, யாழ்ப்பாணம் போன்றஇடங்களில் கடமையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. (சு - 60)

### ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன்

# மட்டு நகரில் 36கோடிரூபா செலவில் விரைவில் கல்வியியற் கல்லூரி

[மட்டக்களப்பு]

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் மட்டக்களப்புமாவட்டத்தில்36 கோடி செலவில் தேசிய கல்வியியல் கல்லூரி அமைக்கப்படவுள்ளது.

இக்கல்வியியல் கல்லூரியில் தமிழ் மொழி மூலம் 460 ஆசிரியர்கள் பயிற்றப்பட முடியும்.

20 கோடி ரூபா கட்டட அமைப்புக்கும் 16 கோடி உபகரணங்களுக்கும் என நிதி செலவிடப்படவுள்ளது.

மட்டக்களப்பு புதுக்குடியிருப்பு பகுதியில் அமைய உள்ள இக்கல்வியியல் கல்லூரி 25 ஏக்கர் நிலப்பரப்பில் அமையவுள்ளது குறிப்பிடத்தக்கது.

மேற்படி கல்வியியற் கல்லூரி அமையும் பட்சத்தில் கிழக்கு மாகாண மாணவரின் கல்வித் தேவை ஓரளவு பூர்த்தியாகக் கூடிய வாய்ப்பு ஏற்படுமென கல்வியாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## ஈ. பி. ஆர். எல்.எவ்...

சுரேஸ் அணி யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை, ஆகிய மாவட்டங்களில் சுயேட்சையாக வேட்பாளர்களை நிறுத்தவுள்ளது.

இதேவேளை சுரேஸ் பிரேமச்சந்திரன் யாழ்ப்பாணத்திலா அல்லது வன்னியிலா போட்டியிடவுள்ளார் என்பது இன்னமும் தீர்மானிக்காத நிலையில் வன்னியில் சுரேஸ் போட்டியிடுவதை சிலர் விரும்பவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

1994 ஆம் ஆண்டு சுரேஸ் பிரேமச்சந்திரன் கட்சி சின்னத்தில் போட்டி இட்டு தோல்வி அடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## உதவி...

# வேட்பாளர் தெரிவு இறுதிமுடிவு இல்லை

(வவுனியா)

தமிழர்விடுதலைக்கூட்டணியின் வன்னி மாவட்ட வேட்பாளர் பட்டியல் தெரிவுசெய்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. எதிர்வரும்புதன்கிழமை இறுதிமுடிவு எடுக்கப்படும்என கூட்டணி வவுனியா கிளைச் செயலாளர் புனித சிங்கம் மூர்த்தி தெரிவித்தார். நேற்று பி. பகல் வேட்பாளர்களைத் தெரிவுசெய்யும்குழு விண்ணப்பங்களைப் பரிசீலித்து எந்த விதமான இறுதிமுடிவுஎடுக்கப் படவில்லைஎனத் தெரிவிக்கப் படுகின்றது. (வ)

## 18வருட......

இராணுவ நடவடிக்கையினால் மட்டும் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரமுடியாது, அரசியல் தீர்வு மூலம் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பலப்படுத்தி அதனால் மட்டுமே இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணமுடியும் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

# காணாமல் போயுள்ளார்

(வவுனியா)

சோதனைச் சாவடியில் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படும்வவுனியாமாவட்ட புளொட் அமைப்பின் முன்னாள் நிதிப் பொறுப்பாளர் வித்தி என அழைக்கப்படும் வேலாயுதம்பிள்ளை தர்மலிங்கம் (வயது 36) காணாமல் போயுள்ளார். இவர் கடந்த 10ம் திகதி கோயில்குளம் சோதனைச் சாவடியில் கைது செய்யப்பட்டதாகவே புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மனித உரிமைகளுக்கான ஆணைக்குழுவின் வவுனியா அலுவலக அதிகாரி எஸ். சிறிதரன் நடத்தியவிசாரணையின்போது இவர் பாதுகாப்பு படை முகாம்களில் இல்லை என்பது தெரிய வந்துள்ளது. (வ)

## நாடு பிரிவதை

# புலிகள் தாக்கியதில் பொலிஸ் உட்பட மூவர்பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு அம்பாறை பாதுகாப்பு எல்லைப் பகுதியில் விடுதலைப்புலிகள் மறைந்திருந்து தாக்கியதில் ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் உட்பட மூன்றுபேர் பலியானதுடன் இரண்டு பொலிஸார் காயமடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தில் பலியான மற்றைய இருவரும் ஊர்காவல் படையினர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ந)

# அலங்கார உற்சவம்

(நல்லூர்)

யாழ். கந்தர்மடம் ஆத்திசூடிவீதி அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகியது.

பதினான்கு தினங்கள்நடைபெறவுள்ள இந்த அலங்கார உற்சவத்தின் தொடரில் 3.9.2000 ஞாயிற்றுக்கிழமை பகல் விசேட சங்காபிஷேகமும், அன்னதானமும் நடைபெற்று மாலையில் தெருவீதி உலாவும் 4.9.2000 திங்கட்கிழமை மாலை வைரவர் சாந்தியும் இடம்பெறவுள்ளது. (செ)

மிதவாதக் கட்சிகளுடன் இணைந்து போட்டியிட்டால் என்ன? என்று ஒருசிலர் கேட்டுள்ளனர். தமிழ்க் காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தளவில் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்காத எந்தக் கட்சியுடனும் தாம் கூட்டுச் சேரப் போவதில்லை என அழுத்தம் திருத்தமாகக் கூறிய குமரகுருபரன் தமிழ் தேசிய இனத்தின் போராட்டங்களை தேசிய ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் எடுத்துக்கூறுவதற்கு பாராளுமன்றத்தைப் பயன்படுத்தவே போட்டியிடுகிறது என்று கூறினார்; (வ)

ஸ்ரீ செல்வா
[யாழ்ப்பாணம்]
பிரசாந் இம்ரான்
நடித்த
பார்த்தேன்
ரசித்தேன்
CD பிரதி (புதியவெளியீடு)
காட்சி நேரம்
10-30, 2-00 (ப.நே)
[இ 688]

## உதவி...

தொடர்பாகவும் முடிவெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இக்கலந்துரையாடலில் சகலதேர்தல்மாவட்டங்களில் இருந்தும் உதவித் தேர்தல் ஆணையாளர் சலந்துகொள்ளவுள்ளார்; [வ]

## தேர்தல்...

விக்கப்படுகிறது:

இதேவேளை ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவாளர்களும் தேர்தல் வன்முறைச் சம்பவங்களில் அகப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## புளொட்...

தெரிவித்துள்ளன;

இதேவேளை வவுனியா நகரசபையின் முன்னாள் தலைவர் ஜி.ரீ. லிங்கநாதன் முன்னாள் உபதலைவர் கே. சந்திரகுலசிங்கம் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வி. பாலச்சந்திரன் ஆகியோர் புளொட் அமைப்பின் வன்னி மாவட்ட வேட்பாளர் பட்டியலில் இடம்பெறவுள்ளனர்.

புளொட்அமைப்பின் வேட்பாளர் பட்டியலில் இறுதி முடிவு நேற்று எடுக்கப்படவிருந்தபோதும் அது பின் போடப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் இனப்பிரச்சினையை தீர்வுக்குகொண்டு வருவதற்கான அரசியல் தீர்வுத்திட்டத்தை கொண்டு வந்தது;

இவ் அரசியல் தீர்வுத்திட்டயாப்பு பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவு வழங்க மறுத்ததன் காரணமாகவே இனப்பிரச்சினையில் தீர்வினைக்காண முடியவில்லை என்றும் கூறினார்.

முதலாவது பிரசாரக் கூட்டத்தில் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுரத்தரத்வத்தை, புதிய பிரதமர் ரட்ணசிறிவிக்கிரமநாயக்கா உட்பட பல அமைசர்கள் கலந்து கொண்டனர். (வ)

## புலிகள்...

★ கப்டன் கமலன்
(பெருமாள் சின்னசாமி)
மன்னார்.
என்ற போராளியும்
திருநெல்வேலிப் பகுதியில் கடந்த இரண்டாம் திகதி ஏற்பட்ட மோதலில்
★ மேஜர் யோகன்
(லிங்கநாதன் சந்திரகுமார்)
யாழ்ப்பாணம்.

என்ற போராளியும் உயிரிழந்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (7)

## நாடு பிரிவதை

மகாசங்கம், விடுதலைப் புலிகள் மற்றும் அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் முன் வைத்து சகலரினதும் ஆசியுடன் பிரச்சினைக்கு தீர்வு காண்பேன்.

பட்டலந்தை சித்திரவதை முகாம் தொடர்பாக அரசாங்கம் என்மீது சேறு அள்ளி பூசிவருகிறது. உண்மையில் அந்த முகாமுக்கும் எனக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை- அப்படி இருந்தும் அரசு அதனை மிகைப்படுத்தி பிரசாரம் செய்து வருகிறது. இதன்மூலம் அவர்கள் தேர்தலில் வெற்றிபெறலாம் என்று கனவு காண்கிறார்கள்,

தேர்தல் திருத்த சட்டமூலத்தை நிறைவேற்ற அரசு முயற்சித்தபோது அதற்கு தமிழ்க் கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்தமையால் அரசு அதனைக் கைவிட்டது என்று கூறிய ரணில் விக்கிரமசிங்கா இன்னும் சில தினங்களில் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்படும் என்று கூறினார்,

இப் பத்திரிகையாளர் மகாநாட்டில் கட்சியின் செயலாளர் காமினி அத்துக்கொறளை கருஜெயசூரியா ஆகியோரும் கலந்துகொண்டனர். (வ)

ளது. (செ)

## பாம்பு தீண்டி மரணம்

இருபாலைப் பகுதியில்குடும்பப்பெண்ஒருவர் பாம்புதீண்டி யாழ் போதனா வைத்திய சாலையின் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தனபாலசிங்கம் மணிமேகலை (வயது 40) என்பவரே இவ்வாறு காயமடைந்தவராவர். (12)

கஜன்
திரை
ஊர்காவற்றுறை
காத்திக், ரேவதி
ஜனகராஜ், குஷ்பு
நடிப்பில்
கிழக்கு வாசல்
காட்சி நேரம்
பி.ப 3.30 மணி
(இ/652)

இப்பத்திரிகை "வலம்புரி" அச் சேர நிறுவனத்தாரால் இல: 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள [illegible] அச்சகத்தில் 2000 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.